வெள்ளி குதிரைகள்

காஞ்சனா ஜெயதிலகர்

01

டாக்டர் மகிபன் காலை எழுந்ததுமே செய்தித்தாளுடன் உட்காருவதில்லை. வரிசையாய் நவீன வில்லாக்கள் அடுக்கப்பட்டிருந்த தங்களின் குடியிருப்பைச் சுற்றி காலாற நடப்பார். பிறகு காபி, குளியல் எல்லாம் ஆனபிறகுதான் செய்தித்தாளைப் பிரிப்பது.

இன்றும் அதேபோல செய்தவர், தனது ஆரம்ப ஆர்வத்துக்குத் தீனியிட்ட செய்திகளை வாசித்து விட்டு, பின்பு தனக்கு வேண்டிய செய்திகளில் அமிழ ஆரம்பித்தபோதுதான் மெல்லிய நறுமணம் அவரைத் தட்டித் திருப்பியது. நிமிர்ந்தவரின் புருவம் உயர்ந்தது.

"ஹாய் பியூட்டி! எங்கே கிளம்பிட்டே?"

மனைவியை உற்சாகமாய் விசாரித்தார்.

"ஏன், நான் காலையிலேயே குளிச்சு, உங்களைப் போல ஸ்மார்ட்டாக நிறகக் கூடாதாக்கும்?"

மாலினியும் சந்தோஷமாகவே பதிலளித்தாள்.

நாற்பதுகளை எட்டிவிட்ட அந்தத் தம்பதிகள் பார்க்க மட்டுமல்லை, தங்களுக்கிடையேயான பழக்கத்திலும் இளமையானவர்கள்தான்.

பத்து வருஷங்கள் முன்புவரை மகிபன் மருத்துவ துறையின் மேற்படிப்பில் மூழ்கியிருந்தார். இப்போது அவர் நகரின் முன்னணி மனோதத்துவ நிபுணர்களில் ஒருவர். பெரியவர்கள் தேடி இணைத்த அத்தம்பதிகள் வெகு காதலோடு வாழ்க்கையை அமைத்து, கொண்டாடிக் கொண்டிருந்தார்கள். மொத்தக் குடும்ப பொறுப்பு, மகன்களின் கல்வி எல்லாம் மாலதியும் பிஸியாகவே இருந்ததால் தாம்பத்யம் தடுமாறவில்லை.

ஆனால், பள்ளிப் படிப்பை முடித்த பிள்ளைகள், கல்லூரிப் படிப்புக்காக வெளியூர், வெளிநாடு என்று போனபிறகு அதுவரை பரபரப்பாக இயங்கிய மாலினியின் உடலும் மூளையும் அடுத்தது என்ன என்று திகைத்து நின்றன. ஆனால், திகைத்த மனதோடு அவள் நின்றுவிடவில்லை.

'இனி நாம நகருக்குள்ளே இருக்கணும்ங்கற அவசியமில்லையே' என்றவள், கிழக்கு கடற்கரை சாலையில் எழும்பிய வில்லா வீடுகளில் ஒன்றை விலை பேசினாள். அடுத்த இரு வருடங்கள் வீட்டை தன் ரசனைக்கேற்ப அமைப்பதில் கழிந்தன. தனி வீட்டு அமைப்பு என்பதால் கிடைத்த சிறு தோட்டம் அவளுக்கு மிகுந்த ஆசுவாசம்.

எவ்வளவு திருந்தச் செய்தாலும் தோட்ட வேலை ஒருவரை ஓய்ந்திருக்க விடுவதே இல்லையே!

களை எடுப்பது, நீர் வார்ப்பது, திருத்துவது, நடுவது தொடர்ந்த ஓயாத வேலையை அவள் விரும்பிச் செய்தாள். கூடவே இடமாற்றம் அவளுக்குள் இருந்த இன்னொரு திறமையையும் வெளியே கொண்டு வந்தன. பெரும்பாலும் வெளியே நின்றவளின் காதில் அந்தக் குடியிருப்பின் வேலையாட்கள் பேசிய கதைகள் விழுந்து, ஓய்ந்த இரவு நேரத்தில் எழுத்தாகிவிட்டன.

தனது முதல் சிறுகதை ஒரு முன்னணி பத்திரிகையில் வெளியானபோது மாலினிக்கே ஆச்சரியந்தான். பிறகு எழுத்து தொடர்ந்தது. இரண்டு வருட எழுத்துப் பயிற்சி அவளை நாவல்களுக்கு உயர்த்தியது. பொழுது சுவாரஸ்யமாகக் கழிந்ததோடு பரிச்சயமானவர்கள் மத்தியில் தன் அந்ததஸ்து சட்டென உயர்ந்ததையும் மாலினி உணர்ந்தாள்.

முன்பு, 'டாக்டர் மகிபனின் மனைவி' என்று அறிமுகப்படுத்தப்பட்டவள், இப்போது 'இவங்க

யாருன்னு தெரியுமில்லே? எழுத்தாளர் மாலதி மகிபன். போன வாரம்கூட இவங்க நாவல் வெளியானது. இப்ப எதுபற்றி எழுதறீங்க மாலதி?' என்று கொண்டாடினார்கள். பலர் தங்களது பிரச்னைகளை இவள் முன்பு கடைபரப்பி, தீர்வு கேட்கும் அளவுக்குப் போய்விட்டது நிலைமை!

கதையின் முடிச்சுகளை அவிழ்த்து, தன் கதாபாத்திரங்களின் பிரச்னைகளைத் தீர்க்கும் இந்த சாமர்த்தியக்காரிக்கு நம் சிக்கல்கள் எம்மாத்திரம் என்ற நம்பிக்கை அவர்களுக்கு! அப்படி நேற்று வந்த ஒரு தொலைபேசி அழைப்புதான் மாலினியை சீக்கிரமே கிளப்பிவிட்டிருந்தது.

"இன்னைக்கு டோஸ்ட்டும் ஸீரியலும்தான். நானும் சிட்டிக்குப் போகணும்"

"வழக்கமாக நீ போவது செவ்வாயும் வியாழனும்தானே மாலி. இன்னைக்கு என்ன?"

டோஸ்ட்டரில் இருந்து மும்மரமாய் தங்கநிற ரொட்டி சதுரங்களை எடுத்து வைத்தவள், முட்டைகளை அடிக்க ஆரம்பிக்க, டாக்டருக்குள் சுவாரசியம் மொட்டுவிட்டது.

"பத்திரிகை ஆபீஸுக்குப் போறீங்களா மேடம்? எழுத்தாளரின் புதுத் தொடர் ஆரம்பமாகுதா?"

"இல்ல... தெரிஞ்சவங்களைப் பார்க்க போகணும்..."

இவர் கேட்கும் முன்னமே விவரங்களை அள்ளித் தரும் மனைவி, இன்று எதையும் கிள்ளித் தரக்கூட மனமின்றி இருப்பதைக் கண்டுகொண்டார் ஆச்சரியத்துடன்.

"ஏதேனும் பிரச்னையா மாலு?"

அவர் குரலின் கரிசனம் அவளை மடக்கியது.

"நோ... நோ... தெரிஞ்ச பெண்ணிடம் இருந்து நேற்று ஒரு போன்கால் வந்துச்சு. என்னிடம் பேசணும்னு சொன்னா... அதான்..!"

"சரி. அவங்க யார் எனும் ரகசியத்தை மேடம் எப்போ வெளிப்படுத்துவதாய் உத்தேசம்?"

செய்தித்தாளை மடித்துவைத்து விட்டு கேட்டார். வெளியே ஆயிரம் செய்திகள் இருந்தாலும் வீட்டில் நடப்பதை விடவா அவை சுவாரசியம்?

"போயிட்டு வந்த பிறகு உங்களிடம் சொல்லலாம்னு இருந்தேன். அவசரப்படறீங்களே..." அவர் முடியைக் கோதியவள், தொடர்ந்தாள்.

"போன் பண்ணினது கீதா. என் ஒண்ணுவிட்ட பெரியம்மா பொண்ணு. ஏறக்குறைய என் செட். ரெண்டு வயசு குறைய இருக்கலாம். பத்து வருஷங்களுக்கு முன்னே நாம கூட அவ பண்ணை வீட்டுக்குப் போயிருக்கோம்..."

மகிபனுக்கு நினைவு வந்தது.

"தாம்பரம் தாண்டி இல்லையா? கரடுமுரடான விவசாயி கணவரோடு அவங்களை சந்திச்ச சந்திச்ச ஞாபகமிருக்குது..."

"ரைட். எங்கிட்டே பேசணுங்கறா. அவ கொஞ்சம் அவசரப்பட்டது போலிருந்தது. அதான் கிளம்பிட்டேன்"

"மர்ம நாவலும் இனி எழுதிடுவே போல மாலு? மூடு மந்திரமாய் பேசறே" புன்னகைத்தார் மகிபன்.

"பாவம்... கீதாவுக்கு பிள்ளைகள் இல்லை. பண்ணை வீட்டில் ஏகத்துக்கும் தனிமை. மனம் விட்டுப் பேசவும் யாருமில்லாத அவளுக்கு ஏதோ அவசரம். போய் காது தந்து கேட்டுட்டு வர்றதுனு கிளம்பிட்டேன்..."

"எனக்கும் இன்னைக்கு ஒரு டின்னர் மீட் இருக்குது. லேட்டாகும்"

இருவரும் அவரவர் கார்களில் ஏறி கிளம்பினார்கள். தான் ஒரு மர்ம கதையினுள் ஒரு கதாபாத்திரமாய் நுழைகிறோம் என்பதை அறியாத மாலினியின் கார் வேகமெடுத்தது.

02

கீதாவை சந்திப்பதற்காய் குறிப்பிட்ட நட்சத்திர ஹோட்டலுக்குள் நுழைந்த மாலினியை அதன் குளுமை இதமாய் வருடித் தந்தது.

இடையூறு இன்றி பேச இது போன்ற உயர்தர உணவகம்தான் வசதி. நடுத்தர உணவகங்களில் முண்டும் கூட்டம். சாப்பிட்டு முடிப்பதற்குள் நம் நாற்காலியின் பின் நின்று அதைப்பற்றி உலுக்காத குறையாக நம்மை எழுப்பிவிடுவார்களே!

லவுஞ்ச் பகுதியை நோட்டமிட்ட மாலினி, காபி ஷாப்பினுள் நுழைந்தாள். கீதா இன்னும் வந்திருக்கவில்லை. மகிபன் குறிப்பட்டதுபோல பத்து ஆண்டுகளுக்கு முன்பு அவளது வீட்டுக்குப் போனதுதான். அதன் பிறகு கல்யாண வீடுகளில் சில நிமிடங்கள் பார்த்துப் பேசியிருக்கக்கூடும். நேற்று மதியம் கீதாவின் அழைப்பு மிக எதிர்பாராதது.

"கதையெல்லாம் எழுதறேனு கேள்விப்பட்டேன் மாலு. கிரிதரன் சித்தப்பால்ல.. போன வாரம் நம்ப பண்ணைக்கு வந்திருந்தாங்க. என் வீட்டுக்காரர் உற்பத்தி செய்யும் உரம் நாலு மூட்டை வாங்கிப் போறதுக்காக. அப்போதான் உன்னைப்பற்றி சிலாகிச்சு பேசினாங்க. உன் புது நம்பர்கூட அவர்கிட்டே இருந்துதான் வாங்கினேன்..."

நல விசாரிப்புகளுக்குப் பின்பு கீதா மறுபடி இவளது எழுத்துக்குத் தாவினாள்.

"எப்படியோ உன்னுடைய ஒரு நாவலை வாங்கி வாசிச்சிட்டேன். இனி லைப்ரரிகளிலும் உன் புத்தகங்கள் வந்துடும். கதை, கதாபாத்திரங்கள் எல்லாம் ரொம்ப இயல்பா இருந்துச்சு மாலு. முழுக்க கற்பனையா தோணலை. நீ கேள்விப்பட்ட சம்பவங்களும் சந்தித்த நபர்களையும் கொண்டுதானே எழுதியிருக்கே?"

"கற்பனையும் நிஜமும் பாதி பாதின்னு வையேன்"

மாலினி மழுப்பலாய் சிரிக்க, கீதாவின் தொனி இறங்கியது. "கற்பனையை மிஞ்சும் உண்மைகளும் உண்டு மாலு. பழமொழியே இருக்கில்லையா? 'ட்ரூத் இஸ் ஸ்ட்ரேஞ் தென் ஃபிக்ஷன்'னு"

"ம்... ம்..."

"நான் சொல்றதைக் கேட்டா நீ நம்ப மாட்டே மாலினி. அசாத்தியமான கற்பனைன்னு நினைப்ப. எங்கதையை உங்க வீட்டு டாக்டர் கேட்டால் எனக்கு புத்தி பிசகிடுச்சுன்னு மருந்து தருவார். பெத்தவங்க பரலோகம் போயாச்சு. கூட பிறந்தவன் அயல்தேசத்துல. யார்ட்ட சொல்றதுங்கற தவிப்போட இருந்தப்பதான் உன் நாவலை வாசிக்க நேர்ந்தது. வாழக்கையை மனுஷங்களை அழகா அலசி ஆராய்ந்த எழுத்து. சிறு வயதிலிருந்தே பழகின உன்னிடம் என்னால் சுலபமாய் பேசமுடியும். அதைவிட முக்கியம் உன்னால் நான் சொல்றதைப் புரிஞ்சுக்க முடியும். நாம சந்திக்கணும் மாலினி. நாளைக்கு சிட்டிக்கு வர்றியா?"

"என் கார் சர்வீஸிங் வியாழனன்று..."

"தாமதிக்காதே ப்ளீஸ். எனக்குள்ளே டைம் பாம் வச்சது போலிருக்குது. என்ன டைம் செட் செய்து எப்போ வெடிக்கப் போகுதுங்கறது எனக்குத் தெரியலை. நாளை காலைல வந்துடேன்..."

இடத்தோடு நேரத்தையும் கீதாவே குறிப்பிட, மாலினியால் மேலும் மறுக்க முடியவில்லை. இந்த நாட்கத் தனமான உரையாடலைக் கணவரிடம் சொன்னால்,

"நான்சென்ஸ்... போய் ஏதேனும் வம்பில் மாட்டிக்காதே" என்றுவிடக் கூடும். அதனால்தான் வெறும் சந்திப்பு என்று மட்டும் சொல்லிவிட்டு வந்துவிட்டாள்.

கீதாவின் குழந்தைத்தனமான முகம் நினைவிலாடியது. வீட்டுக் கல்யாணங்களில் சிறுமிகளாய் இருவரும் சேர்ந்து கொட்டமடித்த நினைவுகளும் அதோடு சேர்ந்தே வந்தது. கீதாவின் கல்யாணத்தின்போது அலங்காரத்தில் உதவியதும், கிண்டலடித்ததும் மறக்கவில்லை. ஆனால் திருமதி ஆன பிறகு கீதாவிடம் பழைய துள்ளல் இல்லை. குழந்தை இல்லாதது ஒரு காரணமாய் இருக்கலாம். சற்று கெடுபிடியான கணவனும்கூட. பரந்த பண்ணை வீட்டில் குழந்தைகள் கலைக்காத அமைதியில் வாழ்ந்தவள் பாவம் ஒடுங்கிப் போய்விட்டாள். அதில் இருந்து மீளத்தான் இந்த நாடகமோ? தன் வாழ்வில் பெரும் சுவாரசியம், ரகசியம் இருப்பதுபோல ஒரு மாய்மாலமோ? யாரிடமும் சொல்ல முடியாதபடி அப்படியென்ன பிரச்னை கீதாவுக்கு இருக்கக்கூடும்?

எந்த பிரச்னையாக இருந்தாலும் மலினியின் பாட்டி அதற்கு ஒரு விளக்கம் தருவார்.

'நமக்கு கஷ்டம் வந்துடுச்சேன்னு மிரண்டுரக்கூடாது. கஷ்டம்ங்கறது தெய்வீக அறுவை சிகிச்சை! நம்மைத் திருத்த ஆண்டவன் அனுப்பறது. பூ மலருவது போல நாம மலரக் கிடைக்கும் ஒரு வாய்ப்பாக்கும் அது. ஆக அனுபவிச்சு மலர்ந்துக்கணும்..!'

மாலினியின் கணவரின் கோணம் வேறுமாதிரியாக இருக்கும்.

'பிரச்னைகள் நம்மை துன்பப்படுத்தறது இல்லை. அதை நாம கையாளும் விதம்தான் வருத்தமும் தருது. அதிலிருந்து தப்ப பலர் ரெண்டு வழிகள்ல முயலுவாங்க. ஒன்று, தற்கொலை. அடுத்தது, ஆழந்த உறக்கம். அதனால்தான் சிலர் ட்ரக்ஸ் எடுத்துக்கறது. தகுந்த ஆலோசனையுடன் பிரச்னையை அணுகணும்' என்பார்.

கீதாவின் பிரச்னை எதுவாயினும் அதற்கேற்ற ஆலோசனை சொல்லும் தகுதி தனக்கு உண்டா என்ன? என்ற கேள்வி மாலினிக்குள் எழுந்து அடங்கியது. உடனே எதையும் சொல்லாமல், மனோதத்துவ மருத்துவரான தன் கணவரிடம் வந்து பேசிதான் செய்ய வேண்டும்.

நினைவைக் கலைத்து 'ஆர்டர் ப்ளீஸ்...' என்ற பேரரிடம் சிறு சமோசாக்களோடு காபிக்கு ஆர்டர் தந்தவள், கீதாவுக்காக காத்திருந்தாள். உத்தியோகம் ஏதும் பார்க்காத, குழந்தைகள் இல்லாத கீதாவுக்கு அப்படி என்ன பெரிதாக பிரச்னை இருக்கக்கூடும் என்று தனக்குள்ளேயே கேள்வி எழுப்பிக் கொண்டு!

www.namthozhi.com

www.namthozhi.com

சற்றைக்கெல்லாம் சுற்று முற்றும் பார்த்தபடி நுழைந்த கீதா முன்பு பார்த்ததற்கு சற்று மெலிந்திருந்தாள். வயதுக்கு மீறிய சோர்வு முகத்தில். கண்களின் கீழ் கருவளையங்கள். கவனமாய், ஆர்வமாய் உடுத்திக் கொள்ளவும் இல்லை என்பதால் பகட்டான அச்சூழலுக்குப் பொருந்தவில்லை அவளது தோற்றம். பழுப்பு ரா சில்க் குர்தியில் சிறு வைர நகைகளோடு கையசைத்த மாலினியைப் பார்த்துவிட்டு நெருங்கியவள்,

''தாங்க்ஸ் மாலு! ஸாரி... டிராஃபிக்ல லேட்டாயிருச்சு. ரொம்ப தொலைவில்லையா?'' என்ற கீதா, இவளது கையைப் பற்றியபடி அமர்ந்தாள்.

கண்ணாடி குவளையில் இருந்த குளர்நீரைப் பருகிவிட்டு,

“ஜம்முனு இருக்கே மாலு... உடம்பும்கூட கட்டுவிடலை உனக்கு” பாராட்டினாள். சதா எதையேனும் இழுத்துப் போட்டுச் செய்யும் சுபாவம் என்பதால் மாலினியின் எடை அதிகம் கூடவில்லை. தோட்ட வேலையின்போதுகூட கையுறை, தொப்பியுடன் இருப்பதால் சருமமும் பாதிப்படையவில்லை.

“நீயும்தான் நல்லாருக்கே” என்று பதிலுக்குக் கூற முடியாததால், ''உன்னைப் பார்க்கிறதில் சந்தோஷம் கீதா'' என்றாள் குரலில் பிரியம் பொங்க!

தனக்கும் கொறிக்க, குடிக்க சிலது ஆர்டர் செய்த கீதா கேட்டாள்,

''ஒரு மணி நேரமேனும் நீ என்னோட இருக்கமுடியுமா மாலு?''

ஆனால் அதற்கான பதிலுக்குக் காத்திராமல்,

“நான் ரொம்ப ஆபத்தான, இக்கட்டான நிலையில இருக்கேன்” என்று தொடர்ந்தாள்.

அவள் சொல்வது கற்பனை அல்ல என்பதை அவள் கை விரல்களின் நடுக்கமும் விழிகளின் கலக்கமும் உறுதி செய்தன.

“நேரமிருக்குது கீதா. நிதானமாய் சொல்லு”

“உனக்கே தெரியும், நெருங்கின குடும்பம்னு எனக்கு இங்கே யாருமில்லை. குடும்பத்து பெரியவங்ககிட்டே சொன்னாலும் அவங்க பெருசா என்ன செய்திட முடியும்? அவங்க மனசும் சங்கடப்படறதுதான் மிச்சம். ஆனா மனசை அழுக்கற பாரத்தை யாரிடமேனும் சொல்லி இறக்கிவைக்கணுமே..?''

அதிகம் கறுத்திருக்கிறாளே என எண்ணிய மாலினி மெள்ள, “ஹெல்த் ப்ராப்ளம் இல்லையா?” வினவினாள்.

''இந்த நிலைக்கு என்னைத் தள்ளிட்டார். மற்றபடி எனக்கு ஒரு கேடுமில்லை...'' கீதாவின் கண்களின் தேங்கிய நீரில் கோபமும் இயலாமையும் கொப்பளித்தது!

'யார், எவர்?' என்று குறுக்கிடாமல் காத்திருந்தாள் மாலினி. இவளும் இடைபுகுந்து பேசினால் நிச்சயமாய் ஒரு மணி நேரத்தில் பேசித் தீராது.

தவிர கொட்டித் தீர்க்க வேண்டியது கீதாதான். ஆக மௌனமாய் அவள் பேசுவதைக் கேட்டபடி இருந்தாள்.

03

அவர்கள் சாப்பிடுவதற்காக ஆர்டர் செய்து வரவழைத்ததில் பாதி தொடப்படாமல் கிடந்தன.

இப்படி ஒரு கதையை மாலினி எதிர்பார்க்கவில்லை. கீதா சொன்னவற்றை நம்பவா அல்லது வீண் பிரமை என்று ஒதுக்குவதா என்று முடிவு பண்ணமுடியாத குழப்பம். தனிமையும் வெறுமையுமான வாழ்வு இந்தப் பெண்ணை ஒரு மனநோயாளியாக மாற்றிவிட்டதா?

ஆனால் தெளிவாக கோர்வையாகத்தானே பேசுகிறாள்?

“நம்ப முடியவில்லையா மாலினி?”

“கேட்க வருத்தமாக இருக்குது கீதா. ஆனா இந்த நிலை எவ்வளவு நாட்களாய்?”

“தேங்க்ஸ் மாலு. தப்புத்தப்பாக கற்பனை செய்றே கீதான்னு சொல்லாமல் என்னை நம்பினதுக்கு ரொம்ப நன்றி. எனக்கே நம்ப முடியலியே. எங்களுக்கு கல்யாணமாகி ஏறக்குறைய இருபது வருஷமாகப்போகுது. ஓரிரு மாதங்களாய் என் கணவரே எனக்குக் கொஞ்சம் கொஞ்சமாய் விஷம் வச்சு கொல்ல முயற்சிக்கிறார் என்பது... இனி நான் யாரை நம்பறது?”

நீர் கரைகட்டும் கண்களோடு இருந்த கீதாவிடம்,

“சமீபமாக உன் கணவர் தத்து வேற எடுத்ததாகச் சொல்ற? அதுவும் 22 வயசுப் பொண்ணை?”

“நம்ப சொத்துக்கான வாரிசு நம்ப வம்சமாகத் தான் இருக்கணும்னு அவர் தன் அண்ணன் மகளையே தத்து எடுத்துக்கிட்டார். தத்தெடுத்த பிரியா என்னை அம்மான்னு கூப்பிட முடியுமா? சித்தின்னு கூட பாசமாகக் கூப்பிட மாட்டா. அவளுக்கு நான் ஒரு பொருட்டே இல்லை...”

“பக்கத்திலுள்ள கல்லூரியில் லைப்ரரியன் வேலையை ருன் கணவர் அந்த பிரியாவுக்குப் பார்த்து கொடுத்தாருன்னு சொன்னியே.. அவ அதுக்கான கோர்ஸ் ஏதும் படிச்சிருக்காளா?”

''ரெண்டு வருஷமாவே இவருக்குள் இந்த தத்து திட்டம் இருந்திருக்கும் போல. ஆக அவளை அந்த கோர்ஸை முதல்லயே படிக்க வச்சுட்டார். அவ எங்க வீட்டுக்கு வரவும், அவ வேலைக்குப் போய்வர ஆரம்பிச்சுட்டா”

''அப்படித்தான் அந்த பிரதாப்போட பழகியிருக்கணும். ம்.. ம்?”

''அவனுக்கும் எங்க குடும்பத்துக்கும் எந்த சம்பந்தமும் இல்லை மாலு. பல கிராமங்களுக்கு எங்க ஊர் மையமா இருக்கறதால இங்கே ஒரு டிபார்ட்மென்டல் ஸ்டோர் ஆரம்பிச்சா, லாபம் பார்க்கலாம்னு அந்த பிரதாப் தம்பி வியாபாரத்தை ஆரம்பிக்க, பிரியாவோட மட்டுமல்ல... நம்ப வீட்டோடயே நல்லாப் பழகிருச்சு. எங்கிட்டே அத்தனை பாசமாய் பழகும்...”

“ஒரு மூணாம் நபர் வீட்டுக் குள்ளே வந்து நெருங்கிப் பழகுறது பிடிக்காமல்தான்...'' மாலினி முடிக்கும் முன்னே வெட்டினாள் கீதா.

“எனக்கு விஷம் வைக்கறாருங் கறீயா? அதுக்குக் காரணம் செகரட்டரிங்கற பேர்ல அவர் கூட்டிட்டு வந்த சிங்காரிதான்”

“அதாவது சொர்ணம்ங்கற 35 வயசுப் பொண்ணு?”

“ஆமா... கல்யாணமாகாதவ. சின்னப் பொண்ணாட்டம் உடுத்திக்கிட்டு கொஞ்சி கொஞ்சி வேற பேசுவா. கண்றாவி”

“உங்க வீட்டுக்காரர் பண்ணை, உரம்னு பார்க்கும் வேலைக்கு ஏன் செகரட்டரி? அதுவும் சிங்காரமாக..?”

''தன் அனுபவத்தை எல்லாம் புத்தகமா எழுதப் போறாராம். ரெண்டு வார்த்தை கோர்வையா அவருக்குப் பேச வராது. எங்கே எழுதறது? அதுக்குத்தான் அவ''

“எல்லாம் இருக்கடும் கீதா. ஆனா உனக்கு விஷம்

வைக்கிறது தான் ஒட்ட மாட்டேங்குது...''

''பிரியா அவரு அண்ணன் பொண்ணு. அவளுக்கு அந்த பிரதாப் மேல நோக்கம். இவருக்கு சொர்ணம் மேல இறக்கம். அவளுக்கு இவரளவு வசதியும் அசடுமாக வேறு ஒருத்தன் அகப்பட மாட்டான். அதனால அந்த நாலு பேரும் ஒண்ணுக்குள்ளே ஒண்ணாப் போயிட, வேண்டாம தனிச்சு நிக்கறது நான் மட்டும்தானா?''

சொன்னவளின் உதடு கோணி, அழுகை பொங்கியது.

''ஷ்... ஒரு மணி நேரத்துக்கு மேலாகவே நாம இங்கே இருந்துட்டோம். எந்திரி''

சீதா வந்த டாக்ஸியை அனுப்பிவிட்டு இருவரும் மாலினியின் வாகன் – ஆர் காரில் ஏறிக்கொண்டார்கள். பக்கத்தில் இருந்த பூங்காவுக்குப் போய் வசதியான இருக்கையைப் பிடித்தார்கள். மதிய நேரத்தில் அங்கு அதிக கூட்டமில்லை. யாரும் நம்மை கவனிக்கிறார்களோ என்ற கூச்சமின்றி பேச முடிந்தது.

'உனக்கு எது பிடிக்கலையோ அதை அவரிடம் இதமாய் எடுத்துச் சொல்விடலாமே சீதா?''

''இருக்கிற நாலு பேருக்கும் நாற்பது விதமான சமையல். சாப்பிட்டபடி டிவியில் மேட்ச் பார்க்கறதும், சீட்டு, கேரம்னு ஆடறதும் எனக்குச் சகிக்கலை. அதைச் சொன்னால், 'இதுவரை உன் முகத்தை நானும் என்னை நீயுமாய் பார்த்து 19 வருஷத்தைக் கழிச்சாச்சு. இனியேனும் பேச்சும் சிரிப்புமாய் இருக்கட்டுமே நம்ம வீடு. சாப்பாட்டுல சிக்கனம் பிடிச்சு யாருக்கு சேர்த்து வைக்கணும்? பிரியாகூட நமக்குப் பிறகு இங்கேயோ இருப்பாளோ இல்லை பண்ணையை வித்துட்டு சென்னைக்குள்ளே போயிடுவாளோ தெரியாதும்பார்...''

''பிரதாப்பை பிரியா கல்யாணம் பண்ணினா அவங்க தொடர்ந்து பண்ணையிலேயே இருக்கலாம்னுகூட அத்தான் யோசிச்சு இருக்கலாம்.. ஆனால் எதையும் உன்னிடம் பேசி கலந்தாலோசித்து முடிவுபண்ணியிருந்தால், உனக்கு தனியாய் விடப்பட்ட ஃபீல் வந்திருக்காது...''

''அது உணர்வில்லை.. நிஜம். ரெண்டு மாசம் முன்னேதான் முதன்முதலாக விநோதமான உணர்வு ஏற்பட்டது. சாப்பிட்டதும் வயிறை கருட்டி வலிக்க ஆரம்பிச்சது... கூடவே, குமட்டியது. ஓய்ந்சு படுத்திட்டேன். பிறகு ஒரு வாரம் எதுவுமில்லை... மறுபடி ஆரம்பமாச்சு...''

''ஏதோ ஒவ்வாமையினால் இருக்குமோ?''

''இதுவரை அப்படி ஏதுமில்லையே.. தவிர மத்தவங்க எல்லாம் கிழங்காட்டம் இருக்க, எனக்கு மட்டும் ஏன் அவதி?''

''அத்தான்தான் காரணம்னு ஏன் நினைக்கிறே சீதா?''

''இவர் கிச்சனுக்குள்ளே அநாவசியமாய் போயிட்டு வர்ற அன்னைக்கெல்லாம் எனக்கு கோளாறாயிடும். முதல் தரம் சொர்ணம் ஏதோ பழ அப்பம் செய்ய சமையலறைக்குள் புக, இவரும் அசட்டாட்டம் பின்னே போனார். அன்றுதான் எனக்கு அசௌகரியம் வயித்துல''



''ஓஹோ... அப்ப ஏன் சொர்ணத்தை சந்தேகிக்கலை நீ?''

''பிறகு அவளை நான் சமையலுக்குள் விடலையே. இவர்ட்ட கண்டிச்சுச் சொல்லிட்டேன். எழுத வந்தவ, முன்னறையோட நின்னுக்கட்டும். மீறி வரவேண்டாம்னு. விஷம், வசியம்னு ஏதேதோ செய்யுதுங்க. அதெல்லாம் ஆபத்துன்னு நான் எடுத்துச் சொன்னதை ஏதோ கேட்டுக்கிட்டார். ஆனால் விஷம் வச்சு என்னைக் கழிச்சு விடற எண்ணம் அவருக்கு அப்பதான் தோணியிருக்குமோ என்னவோ?''

சீதாவின் முகக் கருமை மேலும் கூடித் தெரிந்தது.

விஷமேறி நீலமானதுதான் தன் பார்வைக்குக் கருத்துப் போனதாகத் தெரிகிறதோ? இப்போதே இவளைக் கூட்டிச்சென்று ரத்தத்தைப் பரிசோதனை செய்து விட்டால் என்ன? ரத்தத்தில் விஷக் கலப்பு இல்லாவிட்டால் சீதாவின் பயத்தை நீக்கிவிடலாம். ஆனால் ஒருவேளை பிரச்னை இருந்தால் மருத்துவரான தன் கணவரும் அருகே இருப்பதுதான் பாதுகாப்பு. அடுத்து என்ன செய்யலாம் என்ற குழப்பம் இராது.

''அவர் அடிக்கடி உரம், பூச்சிக்கொல்லி விற்பனை சம்பந்தமா வெளியூர் போவார் மாலினி. அப்ப எனக்கு எந்தக் கோளாறும் நேரலை. நான் அசமந்தம். இதைக்கூட கண்டு குறிப்பிட்டது பிரதாப்தான்''

இப்போது மாலினியால் குறுக்கிடாமல் இருக்க முடியவில்லை.

''அது சரியாபடலையே. அத்தான் ஊரில் இருக்கும்போதுதான் உனக்குப் பிரச்னைனு உன்னிடம் மூன்றாம் மனுஷன் சொல்றது தம்பதிகளான உங்களிடையே பிரிவை உண்டு பண்றதாகத் தோணுது...''

''அப்படிச் சொல்லாதே... பிரதாப் மட்டும்தான் என்கிட்டே பாசமும் அக்கறையும் காட்டுற ஒரே நபர். அவனையும் சந்தேகிக்கறது, குறை சொல்றது சரின்னு எனக்குப் படலை. என்மேல இருக்கும் அக்கறையினால் அதை அவன் கவனிச்சு இருக்கலாமே?''

''இன்னொரு விஷயம் சீதா. எல்லாருக்கும் பொதுவாக சாப்பாட்டு மேஜையில் உணவு பரப்பி வைத்திருக்க, உனக்கு மட்டும் எப்படி பிரச்னை ஆகுது? எல்லாரும் அதையேதானே சாப்பிடறாங்க?''

''சாதம் எல்லாருக்கும் பொது. குழம்பும் காயும் எனக்குத் தனியே தயாராகும். ஷுகரோட பி.பியும் வந்திருச்சே..!''

''அதான் கொஞ்சம் இளைச்சுத் தெரியறே...''

''எனக்கான குழம்பு பாத்திரம் சின்னது. சுலபமாக அடையாளம் தெரியும். அதனால அதில் எதையாவது சேர்க்கிறது சுலபம்...''

''ஆனா அதுக்கு மனம் வர்றது சுலபமேயில்லை சீதா. எனக்கு அத்தானை அதிகம் தெரியாது. ஆனாலும் இத்தனை வருஷமாய் உன்னோடு வாழ்ந்தவர், உன்னை அழிக்க.. அதுவும் அடிக்கடி முயலுவார்னு சொல்றதை ஏனோ ஏற்க முடியலை...''

''என்னாலும் முதல்ல நம்பத்தான் முடியலை. ஆனால் வயிறு காந்தும். மேலெல்லாம் நமைச்சல், குமட்டல்னு விளைவுகள் எல்லாம் நிஜம் மாலினி. பிரியா வந்ததுல இருந்து என் நிம்மதி போச்சு. வீடே மாறிப்போச்சு. இவளுக்கு என் சொத்தெல்லாம் போகணும்னா அது என்ன நியாயம்? யாருக்குமே அதற்கான தகுதி இருக்கறதாக நான் நினைக்கலை. எல்லாரும் பேராசை கழுகுங்க...''

ஆவேசமாய் குற்றம் சாட்டினாள் கீதா.

04

'நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே!' என்று முறுக்கிக் கொண்டு நின்ற நக்கீரரைப் பற்றி மாலினியின் கல்லூரி ஆசிரியை சொன்ன ஒரு வித்தியாசமான கருத்து இவளுக்குமே ஏற்புடையதுதான்.

'வானுலக மகளிரின் கூந்தலுக்கு இயற்கையிலேயே மணம் உண்டு என்று சிவன் சொல்ல, அதை நக்கீரர் எப்படி மறுக்கக்கூடும்? இந்த மானுடனுக்கு வானுலகப் பெண்களைப் பற்றி என்ன தெரியும்? அவர்களைப் பார்த்ததுகூட இல்லையே. தான் சங்கப் புலவர் எனும் பெருமிதத்தில் தெரியாத சங்கதியை தெரிந்ததுபோல பேசியதால்தான் சிவனின் நெற்றிக்கண் திறந்துவிட்டது'

மொத்தத்தில் நம் குற்றம் குறைகளை மறைக்கவே நாம் பிறரைக் குற்றம் சாட்டுவது. நாம் பிறரில் துருவித்தேடும் தீய குணங்கள், பிறகு நம்மையே அடைந்து நம்மை அழிக்கும் என்றும் ஆன்மிகம் சொல்ல, பிறரில் குற்றம் தேடும் குணத்தை முடிந்தளவு ஒடுக்கிவிட்டாள் மாலினி.

கீதா அதற்கு மாறாக தன்னைச் சுற்றியிருந்தவர்களிடம் குற்றம் தேடி, அதில் கசந்து போயிருந்தாள். பிரதாப் தன்னிடம் பரிவாக நடந்து கொள்வதாகச் சொன்னாலும் வேறு ஏதோ ஒரு தகவலை கீதா மறைப்பதாகப்பட்டது மாலினிக்கு.

"பிரதாப் உன்னிடம் பிரியமாகப் பழகியதாகச் சொன்னாயே கீதா... எப்படின்னு சொல்ல முடியுமா?"

"வீட்டுக்கு வந்ததும் என்னிடம் வந்து ரெண்டொரு வார்த்தை பேசுவான். நான் சமையல் கட்டில் இருந்தாலும் தேடி வந்து விசாரிச்சிடுவான். அவன் ஸ்டோருக்கு புதுசாக வர்ற மசாலா பொடி, சோப்பு, ஃபேன்ஸி டப்பாக்கள் எனக்குப் பரிசாக வரும். எல்லத்தையும் விட..." தயங்கியவளை ஊக்கினாள் மாலினி.

"போன மாசம் என் பிறந்தநாளுக்கு ஒரு புடவைகூட வாங்கித் தந்தான்" என்றவள், மறுபடி அழுதாள்.

"இவர் இத்தனை வருஷத்துல ஒரு தரம்கூட பூ புடவைன்னு வாங்கிட்டு வந்து நின்னதில்லை. 'எனக்கந்த இழவெல்லாம் என்னத்தை தெரியும்? உங்கிட்டேதான் வேண்டிய காசைத் தந்துடறேனே.. போய் வாங்கிக்க'ம்பார். நானும் அதுக்குப் பழகிட்டேன்னாலும் ஒருத்தர் நமக்காக கடையேறிப்போய் தேடி ஒரு பொருளை அதுவும் புடவையை வாங்கி வந்து நீட்டும்போது நெஞ்சு உருகுதில்லே?"

அந்த உருக்கம் கண்ணீராகப் பெருகி ஓடியது.

"ஒருதரம் அரளித் தோட்டத்துல நின்னபோது விஷம்னாலும்கூட இந்தப் பூவின் நிறம் எத்தனை ரம்யம்னு நான் சிலாகிச்சதை நினைவு வச்சிருந்து அதே நிறத்துல சேலைய தேர்தெடுத்து இருந்தான். பிறகுதான் இவனுக்கு நான் ஏதேனும் செய்யணுமேன்ற யோசனை வந்தது எனக்கு"

மறுபடி தன் பேச்சுக்கு கடிவாளமிட்டு நிறுத்தி விட்டாள் கீதா.

"பிரதாப் இப்படி உங்கிட்டே பிரியம் காட்டுறதில் பிரியாவுக்கு..?"

மாலினி இழுத்தாள்.

"அவளுக்குத்தான் நான் ஒரு பொருட்டே இல்லையே. கொல்லையில சுத்துற காக்காக்கு ஒரு கவளம் சோறு வைக்கிற வேலைக்காரியை நாம கோவிச்சுக்கறோமா என்ன?"

கசப்பாய் கேட்டாள்.

"ஆங்... வீட்டுல சமையல்காரி உண்டே? அவளைப் பத்தி சொல்லு..?"

"பேரு மல்லிகா. ரெண்டு வருஷத்துக்கு முன்னே வரை சமையலுக்கு ஆம்பிளைதான். வயசான அவருக்கு முடியலைன்னு ஆனதும் இந்தப் பொண்ணு வந்தா. புருஷன் கிடையாது. முப்பத்தஞ்சு வயசிருக்கும். ஒரே பொண்ணை படிக்க ஹாஸ்டல்ல சேர்த்து விட்டிருக்கா. லீவு சமயம் அந்தக் குட்டி நம்ப பண்ணையில வந்து இருக்கும். வேற என்ன?"

"அந்த மல்லிகா வேறு யாருக்காகவோ உன் சாப்பாட்டில் விஷம் கலக்கிறாளோ என்னவோ?"

மாலினியின் கைகளை எடுத்து தன் கன்னங்களில் பதித்து முத்தமிட்டாள் கீதா.

"தாங்க்ஸ் மாலு. நான் கேட்டதும் கிளம்பி வந்ததும் இல்லாமல் நான் சொன்னதை நம்பறீயே. எம் மனசு நிம்மதியாகிடுச்சு. என் வாழ்வு தனிமையும் வெறுமையுமாகக் கழியறதால என் புத்தி பிசகிடலை. நீ பண்ணை வீட்டுக்கு வந்து பாரேன். உனக்கே புரியும். அங்கே வேண்டாதவன்னா அது நான் மட்டும்தான். நான் போனதும் அவர் அந்த சிங்காரியைக் கல்யாணம் பண்ணிக்கிடுவாரு. பிரதாப்புக்கு பிரியா. அவங்க வாழ்வு சிக்கல் இல்லாமல் போகும்..."

"அந்த செகரட்டரி பெண்ணோட குடும்பம் பத்தி ஏதும் தெரியுமா?"

"வேலைக்கு வந்தவள்கிட்டே இழைஞ்சு என்னத்தை விசாரிக்கறது? ஏன்.. பிரதாப் பற்றியும்கூட எனக்கு ரொம்ப தெரியாது மாலினி.."

"அவன் எங்கே படிச்சான். குடும்பம் எங்கே இருக்குது, என்ன பண்ணுது இப்படி ஏதும்?"

தெரியாது என்பது போலத் தலையசைத்தாள் கீதா.

"நீ உனக்குள்ளேயே அமிழ்ந்து மற்றவர்களை கவனிக்காமல் விட்டுவிட்டதாகத்தான் தோணுது கீதா"

"எனக்கு மனுஷர் மேல ஈடுபாடு அற்றுப்போச்சு மாலு. பிரியாவைப் பார்க்க இவர் அண்ணன் குடும்பம் வந்துட்டு போகும் போதெல்லாம் எனக்கு மிஞ்சறது தலைவலிதான்"

"அப்ப, யாரோடத்தான் பேசுவே?"

"காய்கறி தோட்டமும் போட்டிருக்கோம். ஏழெட்டுப் பொண்ணுங்க கூடையோட வந்து வாங்கிப் போகுங்க. அதுல செல்வி மட்டும் எங்கிட்டே வந்து உரிமையாய் பேசுவா. நான் வயிறு வலியில சுருண்டு கிடக்கிறபோது கூட உள்ளே வந்து என்னைப் பார்த்துட்டுப் போவா. அவட்டதான் நாலு வார்த்தை நான் சேர்த்தாப்பல பேசுறது"

"அவளிடம் உன் சந்தேகத்தைச் சொன்னியா கீதா?"

"பூடகமாய் பேசினதுண்டு. அவதான், 'என்னமா வாடிப்போயிட்டீங்களே. டாக்டர் என்ன சொல்றார்?'னு கரிசனைப்படுவா"

"அதான... உனக்கு வைத்தியம் பார்க்குற டாக்டர் யாரு?"

"ஏழைக்கேத்த எள்ளுருண்டை. எங்க குடும்ப டாக்டர்னு ஒருத்தர்... வெறும் எம்.பி.பி.எஸ்.தான்..."

"தப்பு கீதா. எத்தனை ஸ்பெஷலிட்ஸ்ட் வந்தாலும் நம் உடல் நலம், குடும்பம் பற்றி அறிந்த டாக்டர் ரொம்ப அவசியம்..."

"அவர் சொன்னபடி எனக்கு 'காஸ்ட்ரைட்டிஸ்' பிரச்னை. முப்பது நாளிலேயே பி.பி, ஷுகர் எல்லாம் வந்துட்டதால மற்ற நோயின் பாதிப்பு அதிகம்னார். தவிர நேசிக்க யாருமில்லாமல், மனசார பேசவும்கூட ஆளில்லாமல் நான் மூச்சடைச்சு கொஞ்சம் கொஞ்சமாய் சாகறேன்... அது புரியாமல் எனக்கு இவர் விஷம் வேற வைக்கிறார்..."

"இவரோட உங்க வீட்டுக்கு சீக்கிரம் வரேன் கீதா"

"வா.. ஆற்று நீர் அதுபாட்டுக்கு ஓடும். ஆனால் சாக்கடையை மூடியும் மறைக்க முடியாதுன்னுவாங்களே.. அதுபோல எங்க வீட்டை ஒரு விநோத மௌனத்திரை



மூடியிருக்குது. வந்து அதிலிருந்து என்னைக் காப்பற்றக் கூடுமான்னு பாரு மாலு..."

05

அலைச்சலும் மன உளைச்சலும் மாலினியை அன்று சீக்கிரமே உறங்க வைத்துவிட்டன. நேரம் சென்று வீடு திரும்பிய டாக்டர் மகிபன், தன்னிடம் இருந்த சாவியைக் கொண்டு திறக்க முடிந்ததால் தம்பதிகள் காலைவரை பேச நேரவில்லை.

இரவு தன் கனவில் பல புது முகங்கள் வந்து பேசியதில், நடமாடியதில் மாலினிக்கு நிம்மதியான உறக்கமில்லை. ஆனாலும் எழுந்ததுமே தன்னிடம் நேற்று கீதா சொன்னவற்றை குறித்து வைத்தாள்.. அது சற்று தெளிவு தந்தது. இனி கணவரிடம் ஓரளவு கோர்வையாய் விவரம் சொல்லலாம் என்ற நினைப்புடன் தன் சுருண்ட கூந்தலை வாரிக்கட்டியவள், மகிபனோடு சேர்ந்து நடப்பதற்குத் தோதான உடைக்குள் புகுந்தாள். இப்போது விட்டுவிட்டால் பிறகு அவரைப் பிடிப்பது லேசில்லை..

"ஹா... என்னோட நடக்க இன்று ஒரு அருமையான துணை இருக்குதுபோல?"

"ம்..ம்... நான் ரெடி"

"பேசறதை நாம உட்கார்ந்தே பேசலாமே மாலு"

கணவர் அடிக்கடி இவள் நோக்கமறிந்து பேசுபவர்தான் என்றாலும், ஒவ்வொரு முறையும் இவளுக்கு ஆச்சரியம் அளிக்கத் தவறுவதில்லை.

"உங்க 'வாக்'கை கெடுக்க வேண்டாமே..."

"நடந்தபடி பேசுவது உடற்பயிற்சிக்கு அத்தனை உகந்தது இல்லை. சீராக மூச்சுவிட்டபடி பேசாமல் விறுவிறுவென நடக்கறதுதான் சரி. தவிர நீ பேச நினைப்பது சீரியஸ் மேட்டர் இல்லையா?"

"எப்படி மகி?"

"நேற்றிரவு நீ அதிகம் புரண்டே... நிம்மதியான தூக்கம் இல்லை. உன் கனவினோடு பேசியதில் குழம்பியிருக்கே!"

கணவரை காதலும் சிறு கர்வமுமாய் ஏறிட்டவள், இறுகக் கட்டியிருந்த கூந்தலைப் பிரித்துக் கோதினாள். தலை சற்று பாரமாகத் தோன்றியது.

"ஒரு நிமிஷம்" என்றபடி உள்ளே போன மகிபன், வந்தது இரு காபி கோப்பைகளுடன்.

"ஓ.. தாங்க்ஸ்"

"குடிச்சு முடி. பிறகு பேசலாம்"

பாதி பருகுவதற்குள் தொலைபேசி அழைக்க, மகிபன் எழுந்தார். இந்நேரம் வரும் அழைப்புகள் அவருக்காகத்தான் இருக்கும். தன் கணவனின் பிரியத்தை அனுபவித்த மாலினிக்கு ஏனோ கீதாவின் மீது அனுதாபம் பெருகியது.

'இந்த காபியில் விஷம் கலந்திருக்கிறாரோ?' என்ற சந்தேகமே போதுமே ஒரு மனைவியை சாகடிக்க! சில நிமிடங்களில் திரும்ப வந்த மகிபன், அமராமல் தன்னையே பார்த்தபடி நிற்க, இவளுக்குள் புதுப்பதட்டம் ஒன்று ஓடியது.

"உட்காருங்களேன்"

"ம்... அழைத்தது உங்க சித்தப்பா மிஸ்டர் கிரிதரன்"

மாலினியின் முகம் வெளிறியது.

"கீதா இறந்துட்டதா சொன்னார்"

ஏற்கனவே கனத்த அவளது தலை, இப்போது சுழன்றது.

'வாழ்க்கையை ஒழுங்குபடுத்த கட்டுப்பாடுகள் எவ்வளவு அவசியமோ, அதேபோல வாழ்வை சுவாரஸ்யப்படுத்த த்ரில் தேவை' என்ற சித்தாந்தத்துடன் கீதா நேற்று தன்னிடம் சொன்னதெல்லாம் கற்பனையோ.. என்று அவளுள் இருந்த சந்தேகத்தை ஒரு அமில அலை வந்து அடித்துப்போனது.

அப்படியானால் கீதாவின் அச்சமும் அனுமானங்களும் உண்மைதானா? கீதாவின் சாவிற்குக் காரணம் யார்?

"என்னாச்சாம்?"

"சில நாட்களா வயிற்று வலினு சொல்லுவாங்களாம். ஆனால் இப்படி சிறுவயதில் போவான்னு நாங்க நினைக்கலியேன்னு அழறார் உங்க சித்தப்பா"

"இப்ப நான் என்ன செய்யணும் மகி..?"

"நேற்று கீதா உன்னைப் பார்த்து பேசியதைப் பத்தி நான் குறிப்பிடலை. இப்போதைக்கு அந்தக் குழப்பம் வேண்டாம்னு தோணுச்சு"

"அது தெரிய வரும்போது எல்லாரும் என்னை விசாரிப்பங்க இல்லை? உறவுக்காரங்க மட்டுமில்லை, போலீஸும்கூட"

"ம்.. நீ ரெடியா இரு. நான் என் அப்பாயின்ட்மென்ட்ஸை மாற்றித் தரணும். பண்ணை வீட்டுக்குப் போக ஒன்னரை மணி நேரமாகும். அப்போ நீ விவரங்களைச் சொல்லு"

மாலினி மறுபடியும் போய் படுத்துவிட்டாள். உடம்பு அதிர்ந்து கொண்டிருந்தது. நேற்று தன்னிடம் அத்தனை பேசிய கீதா இன்று இல்லை. தன் கைகளைப்பற்றி முத்தமிட்ட அவளை இன்று சடலமாய் பார்க்கப்போகிறேன். இப்படி ஒரு பயங்கர நாடகத்தினுள் தன்னை கொண்டு போய் நிறுத்திவிட்டுப் போய்விட்டாளே? தொடரும் நாடகத்தின் முக்கிய காதாபாத்திரமாக, தான் இனி மர்மமும் குழப்பமுமாய் எத்தனை காலம் போராட வேண்டிவரும்?

சிறுவயது கீதாவின் குழந்தைத்தனமான முகமும் நேற்று சந்தித்த சோர்ந்த, சஞ்சல முகமும் நினைவிலாடி இவளை அழவைத்தன.

பாவம்... கீதாவின் ஆசைகள் எளியவைதான். பெரும்பாலான பெண்களைப்போல மெல்லிய ஆசைகளைக் கொண்டு தன்னைச் சுற்றி சிலந்தியைப் போல ஒரு வலைவீடு கட்டி, அதற்குள் ஊர்ந்து கிடந்திருப்பாள். குழந்தைப்பேறு வாய்க்காவிட்டாலும் கணவரின் அரவணைப்பு, சில பாசமான உறவுகள், நிம்மதியும்கூட ஏன் அவளுக்கு வாய்க்கவில்லை?

மகிபன் அழைத்ததும் படுக்கையை விட்டு எழுந்து கூந்தலை மறுபடி கோதி கட்டியவள், வீட்டை மூடிவிட்டு காரில் ஏறினாள். முடிந்தவரை கோர்வையாய் நேற்றைய நடப்புகளைத் தன் கணவரிடம் சொல்ல ஆரம்பித்தாள்.

06

ப. தனுஷ் சர்குலேஷன் லைப்ரரி

பண்ணை வீட்டின் வெளியே 15 கார்களுக்கு மேல் ஒழுங்கின்றி நிறுத்தப்பட்டிருந்தன. பலர் கூடியிருந்தும் அங்கு நிலவிய மௌனம், நடந்தது ஒரு பெரிய அசம்பாவிதம் என்பதை அறிவித்துக் கொண்டிருந்தது. தாழ்ந்த, அகண்ட கூரை வேய்ந்த பங்களா பாணி வீடு அது. அதனுள் நுழைந்ததுமே மரணத்தின் வாசனை எதிர்கொண்டது. ஊதுபத்தி, பூமாலைகளை மீறிய குரூர வாடை. இருளோடிய முகங்களுக்கு ஏற்ப அப்பெரிய கூடத்திலும் அதிக வெளிச்சமில்லை. தணிந்த குரல் பேச்சுக்களும் விசும்பலும் மனதைக் குத்தின.

நடுவே ஓய்ந்து கிடந்தாள் கீதா. வாங்கிவந்த பூமாலையை அவள்மீது வைக்க குனிந்தவளின் கண்களில் இருந்து சரம் சரமாய் நீர் வடிந்தது. வாழ்வின் நிலையாமை, கீதாவின் நிரந்தர பிரிவு, அவளுக்கு நேர்ந்த பரிதாப முடிவு.. அத்தனையும் சேர்ந்து கிளப்பிய துக்கம் அது.

ஓரமாகப் போய் உட்கார்ந்தவள் தன் கணவர், கீதாவின் கணவரைக் கூட்டிக்கொண்டு பக்கத்து அறைக்கு நகர்வதைக் கவனித்தாள்.

வரும் வழியில் இவள் சொன்னதைப் பொறுமையாய் கேட்டபின் இருவருமாய் கலந்து பேசினார்கள்.

'கீதாவின் மரணத்துக்கு முன்பு நீ இதையெல்லாம் சொல்ல, நான் அதை மனப்பிறழ்வுதான்னு ஒதுக்கியிருப்பேன். அதற்கான சிகிச்சைக்காக அவங்களை வரச்சொல்லியிருப்பேன் மாலு. தங்கள் ஆசைகள் நிறைவேறாதபோது பலர் ஒரு கூட்டுக்குள் ஒதுங்கி, அதீத கற்பனைகளால் தங்களைப் போர்த்திக் கொள்வதுண்டு..."

"அதன் விளைவு என்ன?"

"ஆரம்பத்தில் பெரிய ஆபத்தில்லை. ஆனால் சிகிச்சை தராவிட்டால், நோயாளியின் நரம்பு மண்டலமும் பின்னால் மூளையே செயலிழக்கும் அபாயம் உண்டு. செரடோனொன் போன்ற ஹார்மோன்கள் தேவைக்குத் தந்து குணப்படுத்திவிடலாம்"

"ஒரு வேளை கீதா தற்கொலை செய்துகிட்டாளோ?"

"அப்படி ஒரு நோக்கம் இருந்திருந்தால் உன்னை வரவழைத்துப் பேசியிருக்க வேண்டாமே.. ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டு தன் வாழ்வை முடித்திருக்கலாம். இந்த ஆபத்தில் இருந்து மீள நினைச்சிருக்காங்க. ஆக, கீதா சொன்னது உண்மையாய் இருக்கக்கூடும்..."

"அப்ப நாம செய்ய வேண்டியதென்ன? நாளை ஈமக்கிரியைகள். அதோடு உண்மைகளும் எரிஞ்சு அடங்கிடுமே. வெறும் வயிற்று வலியால் சாவுன்றது நம்பறாப்பல இல்லையே.. நாமும் அதற்கு உடன் என்றால் கீதா என்னைத் தேடிவந்து பேசினதுக்கு அர்த்தமே இல்லாமல் போகுமே மகி..."

"கண்டிப்பா அட்டாப்ஸி செய்யணும். இல்லைன்னா 38 வயதில் சாவா, எப்படி? ஏதோ ஒரு மர்மம் இருக்கேன்னு ஒரு பேச்சு இருக்கும்தான்"

"பிரேத பரிசோதனைக்கு குடும்பம் சம்மதிக்குமா? இந்தப் பேச்சை யார் எப்படி தொடங்குவது?"

"நான் அந்தப் பொறுப்பை எடுத்துக்கறேன். கீதாவின் வீட்டுக்காரர் விஸ்வநாதனிடம்

www.namthozhi.com



விவரத்தைச் சொல்லி, அவர் மூலமாவே பரிசோதனைக்குக் கேட்கச் சொல்லலாம்"

"விவரம்னா கீதா வந்து என்னைப் பார்த்து பேசினதையா?"

"அதில் தப்பில்லை. அவரே சந்தேகத்துக்கு இடமில்லாமல் இருக்க அட்டாப்ஸி செய்யக் கேட்டால் அவர் மேல் முழு சந்தேகம் விழாது. குடும்பத்துக்கு அவப்பெயர் குறையும்..."

ஆக, அதைத்தான் மகிபன் இப்போது செய்து கொண்டிருக்கிறார் என்பது புரிய, மாலினி பதட்டமாக உட்கார்ந்திருந்தாள். பலரும் விஸ்வநாதனை சற்று ஓரமாகக் கூட்டிப்போய், செய்ய வேண்டிய சடங்குகள், இன்னும் தகவல் போக வேண்டிய, வந்து சேர வேண்டிய உறவுக்காரர்களைப் பற்றி இதேபோல பேசியிருக்கக்கூடும். ஆனால் இப்போது பேசிவிட்டு திரும்பிய விஸ்வநாதனின் முகம் மேலும் இறுகிக்கிடந்தது. சலனமின்றி அத்தனை பேரின் நடுவே நீட்டி நிமிர்ந்திருந்த தன் மனைவியை வெறித்தது அவரது பார்வை.

'இறந்தும் என்னை நிம்மதியாக இருக்க விடமாட்டாயா?' என்றா அல்லது, 'உன் சாவின் ஏதேனும் மர்மம் இருந்தால் அதை நான் தீர்க்காமல் விடமாட்டேன்' என்ற பொருளா அப்பார்வையில்.

முதல் காயை நகர்த்திவிட்ட நிம்மதியுடன் மாலினியின் கண்கள் அங்குக் கூடியிருந்தவர்களை ஆராய்ந்தது.

'எல்லாம் என் பொறுப்பில்' என்ற தோரணையில் அங்கு வளைய வந்தவர்கள், விஸ்வநாதனின் அண்ணனும் அண்ணியுமாய் இருக்கக்கூடும். இவர்கள் மகளைத்தான் விஸ்வநாதன் தத்து எடுத்தது. அத்தனை சொத்துக்கும் உரியவர்கள் நாங்கள்தான் என்பது போல ஒரு இறுமாப்பு அவர்கள் முகத்தில், பேச்சில் அப்பட்டமாய்த் தெரிந்தது.

இவர்களின் மகள் பிரியா?

அதோ.. பளிச்சென்று வந்து உட்காரும் அந்தப் பெண்ணாகத்தான் இருக்கவேண்டும். துக்கம், ஈரத்தின் சுவடில்லாத கண்கள். சற்று கலைந்த கேசம்தான் என்றாலும் அது அவளது தோற்றத்தைப் பாதிக்கவில்லை. இளமையை எதுதான் பாதிக்கும்? தனக்குள் பேசிக்கொண்டாள் மாலினி. இப்பெண்ணின் மனம் கவர்ந்த, கீதாவையுமே இளக்கிய பிரதாப் எங்கே? அவன் வெளியே நிற்கக்கூடும். உறவினர்களில் அவன் ஒருவனில்லையே. கீதாவின் கணவரும் வெளியே போய்விட போனில் மாறி மாறி ஆண்கள் பேசிய சலசலப்பு.

நினைத்ததும் நடத்திவிடக்கூடிய அளவில் எளியதல்லவே பிரேத பரிசோதனை. முதலில் காவல்துறைக்கு தங்கள் சந்தேகத்தை ஒரு புகாராகக் கொண்டு போய் பதிவு செய்து, பிறகு அரசு மருத்துவர்களால் செய்யப்பட வேண்டியதுதான் முறை. அங்கிருந்த மௌனத்தைக் கலைத்தது ஒரு பெண்ணின் அலறல்.

"ஐய்யயோ... என்னாம்மா? இப்படி எங்களைவிட்டுப் போக எப்படிம்மா மனசாச்சு? யாரழைச்சா? எதுக்கழைச்சா? அழைச்ச எமனை துரத்த உங்களுக்கேன் நாதியத்துப் போச்சம்மா? காய்கறிய தாராளமா தந்து விடுவீகளே.. இனி அப்படியொரு புண்ணியவதிய காண்போமா... ஐயோ.." இரு கைகளையும் உயர தூக்கியபடி ஒப்பாரி வைத்த அந்த கிராமத்துப் பெண்ணை மற்றவர்கள் விநோதமாகப் பார்த்தாலும், மாலினிக்கு அவள் யாரென்பதை ஓரளவு யூகிக்க முடிந்தது. இங்கே விளையும் காய்கறிகளை வாங்கிப்போக வரும் செல்வி? அதற்குள் குளிரூட்டப்பட்ட கண்ணாடி பெட்டி வர, சடலம் அதற்குள் பத்திரப்படுத்தப்பட்டது.

செல்வி தன் புலம்பலை நிறுத்தவில்லை.

"வயிறு கடுக்குதும்பாங்க. சாப்பாடு இறங்கலியே செல்விம்பாங்க. அது இப்படி அள்ளிட்டுப் போகும்னு நினைக்கலியே... யா.. ஆத்தா" சில ஆண்கள் கைகாட்ட, அவர்களின் உறவுப்பெண்கள் செல்வியைச் சற்று ஒதுக்கி வெளியேற்றினார்கள். இது மாலினிக்கு வசதியாய்ப் போனது. மூக்கை சேலைத்தலைப்பில் சிந்தி, முடிந்து கொண்டவளைப் பின் தொடர்ந்து அவளது தோள் தொட்டாள்.

"செல்விதானே?"

"அ.. ஆமாங்க" திரும்பிப் பார்த்த அந்தப் பெண், தன்னைத் தொட்ட உயர்மட்டப் பெண்ணைக் கண்டு பம்மினாள்.

07

தன்னிடம் வேலை பார்பப்வர்களிடம் இயல்பாக பேசிப்பழகும் மாலினிக்கு, காய்கறி விற்கும் இந்தப் பெண்ணிடம் பேச்சு தருவதில் சிரமமில்லை.

"கீதா உன்னைப் பத்தி எங்கிட்டே பேசினதுண்டு செல்வி. நான் கீதாக்கு அக்கா முறை" என்றவள், செல்வி தொடர்ந்த ஒப்பாரியை ஓரளவுக்குக் கேட்டுவிட்டு பேச்சை மாற்றினாள்.

"எங்கிட்டேயும் தன் வயிற்று வலி பற்றிப் பேசினா. ஆனால் அது அவ உயிரையே பாதிக்கும்னு.. பச்"

"உங்களுக்கு இளையவங்கன்றீங்க. ஆனா எங்கம்மா தளர்ந்துப் போயிட்டாங்களே?"

"சமையல்காரப் பொண்ணு பேர் மல்லிகா இல்லே?"

"ஆமாங்கம்மா. என்னத்தைப் போடறே மல்லிகா? என் வயிறு காந்திக் குமட்டுதுன்னுவாங்க. ரொம்ப கஷ்டந்தான் பட்டாங்கபோல"

"மல்லிகா எங்கே? வரச்சொல்லேன்"

இப்போது செல்வியின் கண்கள் மிரண்டன.

"நீங்க ஏதும் ஆபீஸருங்களா?"

"அதெல்லாம் இல்லே. உறவுக்காரி. வேண்டிய பொண்ணு. உங்களைப் பத்தியெல்லாம் பேசியிருக்கா எங்கிட்டே. அதான் பார்க்கலாம்னு" செல்வியைத் தொடர்ந்து போய் மல்லிகாவின் முன் நிற்க, சமையல்காரப் பெண் மிரண்டு ஒதுங்கினாள். செல்வி இவர்களது உறவு முறையை எடுத்துச் சொல்ல, பிறகு ஓரளவு இயல்பானவள், செல்வி சொன்னதையே சொன்னாள்.

"சரி... சாப்பிட்டதும் அவஸ்தைப்பட்டாங்கன்னா, டாக்டரைப் பார்த்தாங்களா?" மாலினி விசாரித்தாள்.

"தினசரி வயிறு கோளாறு பண்ணலியேம்மா. அப்பப்போ தானே அம்மாவைப் படுத்துச்சு"

"டாக்டர்?"

"ஆமாங்க, வருவாரு. ஆனா அவரு தந்த மருந்து ஏதும் கேக்கலியே..."

"வேற வைத்தியம். சென்னை போய் பார்க்கலியா?"

"ஸ்பெஷலிஸ்ட்னு ஒரு வயசாளி டாக்டர் வந்தாருங்கம்மா. ஐயாவுக்குத் தெரிஞ்சவராம். அவரு அம்மா பிரச்னை எல்லாம் கேட்டுட்டு, 'என்னமா வாந்தி, பேதினு காலரா காலத்துல உள்ள விளைவுகளைச் சொல்றியே? பத்தியமா சாப்பிடு'ன்னாரு. 'நூறு பத்தியம் இருந்தாலும் சாவில் இருந்து பத்திரம் ஆயிட முடியுமானுட்டு' அம்மா சிரிச்சாங்க.

"எனக்கு ஒரு வயசு இளையவ.. இப்படி சட்டுனு போனதைத் தாங்க முடியலை. பிரியாவுக்கு ஒரு கல்யாணம் பண்ணி கண்ணாரப் பார்த்துட்டேனும் போயிருக்கலாம்"

மாலினி சொல்ல, 'இத்தனை விவரம் தெரிந்திருக்கிறதே' என்றான பிறகு, இரு பெண்களும் மேலும் இவளுடன் ஒன்றினர்.

பிரதாப், செகரட்டரி என்று எல்லாரையும் சகஜமாய் தன் பேச்சில் தொட்ட மாலினிக்கு மல்லிகா எதையோ மறைப்பதாய் ஒரு சந்தேகம். ஆனால் சமையல்காரப் பெண்ணின் தோற்றம் வளப்பமாய் இல்லை. காதில் கிடந்தது கவரிங் தோடுதான். கையில் ரப்பர் வளையல்கள். கையில் காசு புழங்கும் ஒருத்தி, அதிலும் படிப்பறிவு இல்லத

ஒரு பெண்ணுக்கு நிச்சயம் காது, மூக்கில் தங்கம் வாங்கிப் போட்டுக்கொள்ளத் தோன்றும். நைந்த ரவிக்கையும் நிறமற்றுப் போன புடவையுமாக நிற்க மனம் வராது.

"ஒரு வாய் காபி குடிக்கறீங்களா?"

"இல்லே.." மறுபடி கூடத்துக்கு வந்தவளுக்கு சில ஆண்கள் பதட்டமாக போனில் தகவல் தருவதும் ஒருவருக்கொருவர் உன்னிப்பாய் பேசுவதும் புரிந்தது. விஷயம், மற்றவர்களுக்குப் பரவிக் கொண்டிருக்கிறது.

மகிபன், மாலினியைக் கொண்டு போய் நடுத்தர வயதுக்காரர் ஒருவர் முன்னே நிறுத்தி அறிமுகப்படுத்தினார்.

"இவர்தான் உள்ளூர் டாக்டர். பேர், முத்தழகன்..."

கைகூப்பி வணங்கியவளை அந்த டாக்டர் கேள்விகளால் குடைந்தார்.

"நேற்று கீதா மேடமை பார்த்ததாகச் சொல்றீங்க. வயிற்று வலி தினம் வரலியே.. நீங்க டாக்டரா? இங்கே யாரு அவங்களுக்கு விஷம் வைக்க? அப்படி ஏதும் என்னிடம் அவங்க சொன்னதில்லையே?" என்று.

"சரி, கீதாவுக்கு என்னதான் பிரச்னை?"

"கேஸ்ட்ரைட்டிஸ்"

"பலருக்கு உள்ள அந்த சாதாரண வயிற்று வலி, உங்க மருந்துக்குக் கட்டுப்பட்டிருக்கணுமே டாக்டர் முத்தழகன்?"

"அது கான்சராக இருந்திருக்கக் கூடும். நாங்க யாரும் உடைச்சுப் பேசலை. ஸ்கேன், பயாப்ஸினு நான் பேச்சு எடுத்தாலே மேடம் உடைஞ்சு மறுத்திடுவாங்க. சாரும் அவங்களை வற்புறுத்தினது இல்லை மற்ற சோதனைக்கு.. சிகிச்சைக்கு"

"ஆனா அப்படி விட்டுடற வயசுமில்லையே கீதாக்கு? அவளுக்குமே ஒரு நெருடல். அது என்னன்னு நாம் பார்த்துடறதுதான் நல்லது. நாளைக்கு இதையே திரித்து வித விதமாய் பேசினால் அது நமக்குத்தான் அசிங்கம்"

"ஆனா இது லேசான ப்ரொஸீஜர் இல்லை"

"பரவாயில்லை. எல்லாம் முறைப்படி செய்துடலாம்..."

மிகவிரைவிலேயே வந்த காவல்துறை, கீதாவின் உடலை எடுத்துப் போக, அதுவரை மரண வாசனை சூழ்ந்திருந்த அந்த வீட்டை மேலும் பயங்கரமும் குழப்பமும் சேர்ந்து நின்று தாக்கின.

08

கூத்தாடி வேஷத்தை கலைத்துவிட்டு தன் வீட்டு திண்ணையில் உட்கார்ந்திருப்பது போல, பண்ணைவீடும் மரண சூழலில் இருந்து விடுபட்டு இயல்பாக இருந்தது. அது மாலினிக்கு ஆசுவாசமாக இருந்தாலும், பிரியாவிடம் போய்ப் பேச தயக்கம்தான். போன வாரத்து குளறுபடியின்போது அவளது கண்கள் தன்னை குரோதமாய் துளைத்ததை மாலினி உணராமல் இல்லை. விஸ்வநாதனிடம் தான் வருவதாயும், அவரோடும் பிரியாவிடமும் பேச வேண்டும் என்றும் சொன்ன பிறகே வந்திருந்தாலும் சங்கடமான உணர்வும் உடன் வந்திருந்தது.

சிலநாள் விடுப்புக்குப் பிறகு வேலைக்குப் போக ஆரம்பித்திருந்த பிரியா, மாலை வீடு திரும்பி, குளித்து, சல்வாரில் இருந்தாள். அதன் செஞ் சாந்து நிறம் அவளுக்கு நன்கு பொருந்தியிருந்தது. ஆனால் முகத்தின் கோபச்சிவப்பு அத்தனை அம்சமாக இல்லை. மாலினியின் புன்னகையைப் புறக்கணித்தவள், எடுத்ததுமே கோபமாக எகிறினாள்.

"இப்போ திருப்திதானே? இங்கே பெரிய குளறுபடி பண்ணிட்டீங்க. ஊர்ல இனி சித்தப்பா தலை நிமிர்ந்து போக முடியாது.. இந்த வீட்டின் கௌரவமே போச்சு..."

"ஓ.. எதனால பிரியா? உங்க சித்தி விஷமேற்றி கொல்லப்பட்டதாலா? இல்லை பிரேத பரிசோதனை மூலம் அது உலகிற்கு தெரிய வந்ததாலா?"

இளையவள் வாயடைத்து நின்றாள்.

"சிந்திக்கும் சுதந்திரத்தை யாரும் பயன்படுத்துவதில்லை. எல்லாருக்கும் பேச்சு சுதந்திரத்தின் மீதுதான் ஆசைன்னு கேள்விப்பட்டிருக்கியா? நூலகத்தில் வேலை செய்யும் நீ, நிறைய வாசிக்கணும். அதைவிட முக்கியம் பேசும் முன் சிந்திக்கணும்! ஐயோ.. நம்ப சித்தியின் உயிரை எடுத்தது யார்? எதற்காக? அந்தக் கொலைக்கான தண்டனை அவனுக்கு அல்லது அவளுக்குக் கிடைக்கணும்ங்கற மனப்போக்கு இல்லாமல், நம்மை நம்ப வீட்டு கதையை ஊரார் மெல்லாமல் இருந்தால் போதும்ங்கற உன் மனப்போக்கு தப்பு, அநியாயமும்கூட..."

சற்று முன் கோபத்தில் சிவந்திருந்த பிரியாவின் முகம், வெளிறி தாழ்ந்தது. "உனக்கும் கீதாக்கும் சில விஷயங்களில் உரசல் இருந்திருக்குது இல்லையா?"

"இதுவரை போலீஸ் விசாரணை. இப்போ நீங்களா?" சலித்தாள் இளையவள்.

"அது கடமை. இது கீதாவின் குடும்பம் மேல எங்களுக்குள்ள கரிசனை. எது முந்திக்குதோ அதன் மூலம் உண்மை வெளியானால் சரி"

"எனக்கும் எல்லாம் குழப்பம்தான். நான் எதுவும் அதாவது சித்திக்கு விஷமிடலை"

"ஆர்சனிக் என்ற வேதிப்பொருளை ஒத்த விஷம் கொஞ்சம் கொஞ்சமா கீதா உடம்பில் உணவு மூலம் சேர்ந்திருக்குது. கடைசி தினம் அதிகமாகத் தரப்பட்ட விஷம் அவளைக் கொன்னுருச்சு. நான் ஏதும் செய்யலைங்கறதோடு உன் வேலை முடிஞ்சிடாது பிரியா. யோசி... வேறு யார் அதைச் செய்திருக்கக்கூடும்?"

பிரியாவின் உடம்பு நடுங்கியது.

"இத்தனைக்கும் துணிஞ்ச ஒரு கொலையாளி இந்த வீட்டில் இருக்கக்கூடும். அல்லது வந்து போகக்கூடும்ங்கறதே ஒரு பயங்கரமான உண்மையில்லையா?"

"இங்கே.. இங்கேயா?"

"பின்னே வெளியாள் வந்து செய்த வேலையில்லையே இது. மல்லிகாவிடம் பேசிட்டுத்தான் வந்தேன். கீதாவின் கடைசிவேளை சாப்பாட்டின்போது நடந்ததைச் சொன்னாள். அது கொஞ்சம் விநோதமாய் பட்டது"

பேச்சை நிறுத்திய மாலினி, இளையவளை ஆழம் பார்த்தாள். மறு பக்கம் மௌனம்தான்.

"சாப்பிட்டதும் அத்தானுக்கு வாசனைப்பாக்கு மெல்லும் பழக்கம் உண்டுபோல..."

"ஓ.. அதுவா? பாக்கு டப்பா காலியாகி இருந்ததால் முன் தினமே அதில் புது பாக்கெட் ஒன்றை உடைத்து நிரப்பி வைக்கச் சொல்லியிருந்தாங்க சித்தப்பா. ஆனா மல்லிகா மறந்துட்டதால மாடி ஸ்டோரில் இருந்த பாக்கு பொட்டலத்தை எடுத்துட்டு வரச் சொன்னாங்க. அதிலென்ன விநோதம்?"

"சாப்பிட்ட பிறகு எடுத்து வரச் சொல்லியிருக்கலாம்"

"ஆக சமையல்காரியை வெளியேற்றிவிட்டு, சித்தப்பா சித்திக்காக உணவில் விஷத்தைச் சேர்த்திட்டதாக..."

"இல்லை.. அந்நேரம் சொர்ணா, பிரதாப், நீ எல்லாரும் அங்கேதான் இருந்தீங்க. யாரேனும் ஒருத்தர் அதைச் செய்யும் வாய்ப்பு இருந்ததுங்கறேன்..."

"பிரதாப் அன்று எங்களோடு சாப்பிடலை..." இறுக்கமாகச் சொன்னாள் பிரியா.

"இருக்கலாம். ஆனால் மல்லிகா மாடிக்குப் போய் திரும்ப பத்து நிமிஷம் ஆகியிருக்கும். அந்நேரம் பிரதாப் உங்களோடுதான் இருந்தான். சொர்ணா கிச்சனுக்குள் போறதில்லே போல.."

"சித்தப்பாக்கு காட்டிக்கத் தெரியாதுன்னாலும் அவருக்கு சித்தி மேல ரொம்பப் பாசம்..."

"ஆனா உனக்கு கீதா மேல் பிரமாதமான ஒட்டுதல் ஏதுமில்லை. உரசல்கூட உண்டோ?"

"உங்க சந்தேகம் என்மேல தானா? திடும்னு இவங்கதான் உனக்கு பெத்தவங்க போலன்னு இங்கே வர நேர்ந்ததில் எனக்கு.. கசப்புதான்..."

"முன்னமே அது பற்றி பேசி, உன்னை லைப்ரரியன் கோர்ஸ் படிக்கச் சொன்னது அத்தான்தானே? அதாவது உன் சித்தப்பா?"

"பேச்சளவில் இருந்தது நடைமுறைக்கு வரும்னு நான் நினைக்கலை..."

"ஆனால் இங்கேயிருந்த சொத்து வேறோர் கைக்குப் போயிடக்கூடாதுன்னு உன் அப்பா, அம்மா சொல்லியிருப்பாங்க. தவிர இங்கே உனக்கு வேலையோடு பிரதாப்பின் சிநேகமும் கிடைக்க, லைஃப் சுவாரசியமாத்தான் போயிருக்கணும்"

"பச்.. இப்போ ரொம்ப கொடுமையா இருக்குது. தினம் போலீஸ் வந்து அறைகளைச் சோதனை இடறதும் கேள்விகளால் குடையறதும் தாங்கலை. கேஸ் முடியும் வரை யாரும் வெளியேறவும் முடியாது..."

"நியாயம்தானே பிரியா. வீட்டுக்குள்ளே பாம்பு புகுந்திருச்சுன்னு அதைத் தேடி அடிக்கிறவரை வீட்டாருக்கு நிம்மதியில்லையே? ஏதும் நடக்காததுபோல அவங்கவங்க வேலையை பார்க்க முடியுமா?"

அதுவரை சற்று அலட்சியம் காட்டிய பிரியாவின் முகம், சிறிது அச்சத்துக்கு மாறியது.

"கீதாவுக்கும் உனக்கும் எதில் சரிப்பட்டு வரலை பிரியா? அவ பாசத்துக்கு ஏங்கினவ.."

"அவங்களைப் போலவே நானும் இருக்கணும்னு சித்தி நினைச்சாங்க. நன் வேலைக்குப் போறது அவங்களுக்குப் பிடிக்கலை. நான் வீட்டோட இருந்து சமைச்சு, இந்த நிலத்தைப் பார்த்துக்கிட்டு, இங்கே விளையற காய்களைப் பிரிச்சு, கூடையோடு வரும் பெண்களுக்குத் தந்துடணும்னு ஒரு எதிர்பார்ப்பு. இந்த பண்ணை வீட்டிலும் பாதி அறைகளை புளியும், தானியமும், வத்தலும் அடைச்சிருக்கும். நான் ஒருவேளை

www.namthozhi.com

பிரதாப்பை கல்யாணம் செய்திருந்தால் தனியே ஒரு நறுவிசான வீட்டில் குடித்தனம் நடத்தத்தான் ஆசைபட்டிருப்பேன். ஒருதரம் இப்படி ஏதோ சொல்ல, சித்தி ஆத்திரமாகிட்டாங்க. நான் ரொம்ப தன்னலமாப் பேசிட்டதாக அவங்க அலட்டினது எனக்கு எரிச்சலாயிருந்தது"

அந்த இளம்பெண் மனது விட்டுப் பேச, மாலினிக்கு இவள் பக்கமும் நியாயம் இருந்ததாகத்தான் பட்டது!

''கல்யாணம் பற்றி பிரதாப் என்ன சொன்னார்?"

"கடை எழும்பி, வியாபாரம் இப்போதான் மும்முரப்பட்டிருக்குது. மறுபாதியைக் கட்டணும். அந்த வேலை இப்போ நடந்துக்கிட்டு இருக்குது. அதனால சீரியஸாகப் பேசமுடியலை"

"லோன் எடுத்துதான் கட்டட வேலை நடக்குது இல்லையா? பல லட்சங்கள் ஆகியிருக்குமே... எந்த பேங்க் இவருக்குக் கடன் தந்திருக்குது?"

"நான் அது பத்தியெல்லாம் பிரதாப்கிட்டே கேட்டதில்லே..."

''வாழ்க்கை துணையாகப் போறவரிடம் தானே?"

"அவரிடம் என் சம்பளம் எவ்வளவு என்று நான் சொன்னதில்லை. பிறர் விஷயத்தில் மூக்கை நுழைப்பது நாகரிகமில்லை..."

இப்போதைய தலைமுறை பற்றி முழுக்க புரிந்துகொள்ள முடியாத மாலினி, பிரியாவைத் தங்கள் மகளாக விஸ்வநாதன் இந்தப் பண்ணைக்கு கூட்டி வந்தது ஒரு கன்றுகுட்டியின் கழுத்தில் நுகத்தடியை சுமத்தி உழ வைத்தது போல என்று எண்ணினாள். தன் மனைவியிடம் கலந்து பேசாத அவர், இந்தப் பெண்ணின் கருத்தையும் கேட்டறியவில்லை. பிச்சையைக்கூட பாத்திரம் அறிந்தல்லவா இடச் சொல்லியிருக்கிறார்கள். தன்னை பிறர் விஷயத்தில் தலையிடுவதாக ஜாடை பேசும் பிரியாவின் அறையில் இருந்து வெளியேறினாள். கொலை குற்றம் செய்துவிட்டு எந்நேரம் தன் குட்டு வெளியாகுமோ என்ற தவிப்பில் இருக்கும் ஒரு பெண் இத்தனை துடுக்காய் பேசக்கூடுமா? கேள்விகள் மாலினியின் குழப்பத்தை மேலும் கூட்டின.

09

வெயில் தின்று மழையைக் குடித்து உரமேறிய உடம்புடன் நின்ற விஸ்வநாதனின் முகம் அதற்கான கம்பீரத்துடன் இல்லை. நடுத்தர வயதுடைய அவரது தோற்றம் கடந்த ஒரு வாரத்தில் மூப்படைந்து இருந்தது. அவரிடம் இதமாகவே பேச்சைத் தொடங்கினாள் மாலினி.

"ஸாரி அத்தான்... முதலில் கீதா என்னிடம் தன் சந்தேகங்களைப் பற்றி சொன்னதும், நான் முழுக்க நம்பிடலை. மறுநாளே அவ இறந்த செய்தி வரவும்தான்..."

விஸ்வநாதன் தலையாட்டிக் கொண்டார்.

"நிலாவைப் பார்த்து மாலுமி கப்பலோட்டக் கூடாதும்பாங்க. அதாவது வட்ட நிலா கப்பலை வட்டமிட வைக்குமே தவிர, கரை சேர்க்காது. உங்க வீட்டுக்காரர், கீதா இறந்த வீட்டில் வந்து எங்ககிட்டே இதுபற்றி பேசியதும் 'இது ஏதோ வதந்தி. அதை நம்பி கீதா உளறி இருக்கான்னுதான் நினைச்சேன். ஒரு டாக்டர் சொல்லலைன்னா யாரும் அதைப் பெருசா எடுத்திருக்க மாட்டோம். வதந்தின்னு வட்டமிட்டுட்டு இருப்போம்.. ஆனா அவ உடம்பை கூறுபோட விட்டது.. கஷ்டமாத்தான் இருந்துச்சு"

கம்மிய குரலைக் கனைத்து சீர்படுத்திக் கொண்டார்.

"அவ போயிட்ட அதிர்ச்சியில் என் மூளை வேலை செய்யலை. நான் அடிப்படையில விவசாயிம்மா. எப்ப பயிரிடணும், களை எடுக்கணும், அறுவடை செய்து யார்கிட்ட விற்கணும்ங்கற அளவுலதான் எங்கணக்கு. காரியமெல்லாம் முடிஞ்சு, உட்காரவுந்தான் பிரேத பரிசோதனையில கீதாவுக்கு உண்மையிலேயே யாரேனும் விஷத்தைத் தந்திருந்தா, முதல் சந்தேகம் எம்மேலத்தான் விழுங்கறது எனக்கு உறைச்சது"

பார்வைக்கு விஸ்வநாதன் முரடாகத் தோன்றினாலும் அவரது பார்வையில் ஒளிவு மறைவு இருந்ததாகப் படவில்லை.

''உங்க ரெண்டு பேருக்கிடையே ஏதும் பிரச்னை?"

தன் உள்ளங்கையைச் சற்றுநேரம் பார்த்தவர்,

"நான் அதிகம் பேசறவனில்லை.. அதுதான் என் பிரச்னை. அவளுக்கு பிள்ளை இல்லையேங்கற குமைச்சல். நான் ஓடி சாடி உழைச்சதுல இந்தப் பண்ணை பெருகிச்சு. இத்தனைக்கும் ஒரு வாரிசு இல்லையேங்கற தவிப்பு கீதாக்கு.. அதை அவ அடிக்கடி எங்கிட்டே சொல்லிப் புலம்பவும்தான் நான் பிரியாவைத் தத்து எடுக்கலாம்னு முடிவு பண்ணினேன்..."

"கீதாவுக்கு அதில் சம்மதம்தானா அத்தான்?"

அவரைக்குற்றம் சாட்டாமல் இதமாகக் கேட்டாள் மாலினி.

"கலந்தெல்லாம் பேசலை. ஆன அவளுக்காக எடுத்த முடிவுதான் அது. நம்ப சொத்து நம்ப வம்சத்து கையிலே இருக்கணும்ங்கறது என் கணக்கு. வீட்டில் ஒரு பொம்பளைப் பிள்ளை இருந்தால் போய் வரனு இருப்பங்கனு எதிர்பார்த்தேன். ஆனா பிரியா பொண்ணு அதுபோல தன் சித்திகிட்டே ஒட்டிக்கலை. பாசம் காட்டிக்கலை. அது நான் தெரியாமல் செய்த தப்பு. முன்னே பண்ணையைப் பெருக்கறதில் மும்மரமாக இருந்த நான், தத்து எடுப்பது பற்றி யோசிக்கலை.. தலை நரைக்க ஆரம்பிச்ச நேரம் சிறு குழந்தையை தத்து எடுத்து வளர்க்கறது சங்கோஜமாக இருந்தது. நானும் இவளுமாக உட்கார்ந்து எதையும் பேசிக்காததால... அவளுக்கு ஒரு ஒதுக்கம். எம்மேல கொஞ்சம் கசப்பு திரண்டுருச்சு போல... மூணு வருஷத்துல உர விலை நாலு மடங்கு கூடிருச்சு.. உரவிலையை அதைத் தயாரிக்கும் கம்பெனிகளே நிர்ணயிக்க அரசாங்கம் விட்டுட்டதால விலை தாறுமாறாய் கூடின நேரம், நான் சகாய விலைக்கு செய்து விற்றேன்..."

"அதில் கலக்கும் ரசாயனம்தான் கீதாவின் உணவில் சேர்க்கப்பட்டிருக்குது.. கொஞ்சம் கொஞ்சமாக அவள் உடலில் சேர்ந்த விஷம் கடைசியாய் அதிக அளவில் கலந்து அவளைச் சாகடிச்சிருச்சுனு பிரேத பரிசோதனையின் ரிப்போர்ட் சொல்லுது.."

"நான் கலக்கும் முறை, அளவை எல்லாம் யாருக்கும் கற்றுத்தரலை... சாமான்களை.. அதாவது ரசாயனப் பொருளை எல்லாம் பத்திரமாகப் பூட்டித்தான் வச்சிருந்தேன்..."

"ஆனா உங்களோடு அந்த அறைக்குள் சும்மா பார்ப்பது போல நுழைந்த யாரும் விஷம்னு தெரிஞ்சதும், அதில் கொஞ்சம் எடுத்து வைத்துக் கொள்ளும் வாய்ப்பு இருக்குமில்லையா?"

சிறு பெருமூச்சுடன் தன் தலையைச் சற்று தூக்கி, யோசனையில் ஆழ்ந்தவர், மீண்டும் மாலினியை நோக்கியபோது அவர் விழிகளில் மேலும் சஞ்சலம்!

"எல்லோரும் உரங்கலக்கற சாமான்கள் அறைக்கு வந்திருக்காங்கதான். அப்பப்ப அதை சுத்தப்படுத்துவதற்காய் மல்லிகா, செல்விகூட வந்ததுண்டு..."

''ம்ம்.. இப்ப அருமையாகப் பேசற நீங்க, இது போல உட்கார்ந்து கீதாவிடம் பேசியிருந்தால் நிறைய குளறுபடிகளைத் தவிர்த்து இருக்கலாமே அத்தான்? உங்க எழுத்துக்காக நீங்க சொர்ணத்தை இங்கே கூட்டிட்டு வந்ததுலேயும் கீதாவுக்கு எரிச்சல்.. திகைச்சுப் போயிருக்கக்கூடும் அவள்..."

விஸ்வநாதனின் கண்களில் சிறு அசட்டுத்தனம் சேர்ந்து கொண்டது.

"தப்புதான். கீதா தனிமையில தவிக்கறது எனக்குப்



www.namthozhi.com

புரிஞ்சுது. மகளாக வந்த பிரியா, கீதாவுக்கு செட்டாகலைன்னதும் நான் வேறொரு பொண்ணு இங்கே வந்தா சரிவருமோன்னு செய்த விஷயம் அது. நான் என்ன முயற்சி பண்ணினாலும் கீதா வழிக்கு வரமாட்டேங்கறாளேன்னு ஒரு கோபங்கூட எனக்கு..."

ஒரு வாரத்துக்கு முன்பே இழந்த தன் இணையின் ஞாபகம் அவர் தொண்டையை இறுக்கியது போலும். அடிக்கடி செருமிக் கொண்டார்.

ஆக கோபம் அந்த வீட்டுக்குள் பகடையைப் போல ஒருவர் மாற்றி ஒருவரால் உருட்டப்பட்டிருக்கிறது. எல்லாரது வீட்டிலும் கோபம் எழும்பும்தான். ஒரு புகை போல சுற்றியலைந்துவிட்டு கலைந்து விட்டால் கவலையில்லை. குளத்தின் அடியில் கல்லாகத் தங்கி, ஊறி கிடக்கத்தான் கூடாது.

"இங்குள்ள கல்லூரியின் பிரின்ஸிபல் எனக்குத் தெரிஞ்சவர்.."

"அவர் மூலம்தான் பிரியாவுக்கு அதன் நூலகத்தில் வேலை பார்த்து விட்டிருக்கீங்க?"

"ஆமாம்மா. எனக்குத் தெரிஞ்ச சில விவசாய முறைமைகளை உரம் கலக்கறது பற்றிய சூட்சுமங்களை, என் அனுபவங்களை ஒரு புஸ்தகமாகப் போடறது பற்றி அவர்தான் ஆசை காட்டினார். இதையெல்லாம் சொல்லி வளர்க்கறதுக்கு எனக்குப் பிள்ளை இல்லையேன்னு நான் வருந்த, எல்லாத்தையும் புத்தகமாகப் போட்டால் பலருக்கு வழிகாட்டும்னார். எனக்கு எழுதவெல்லாம் வராதுன்னேன். அதற்கு உதவியாளை ஏற்பாடு செய்யறதாவும் சொன்னார்"

"ஒரு ஆண் உதவியாளரை ஏன் தேர்ந்தெடுக்கலை? உங்களுக்கும் அது சுலபமாய் இருந்திருக்குமே?"

தலையசைத்துக் கொண்டார் விஸ்வநாதன்.

"இருந்திருக்கும்தான். ஆனா ஒரு ஆம்பிளை இங்கே ரெண்டு, மூணு மாசம் தங்கி என்ன செய்வான்? கல்லூரியின் விடுதியில் உதவியாளர் வேலைக்கு மனு போட்டிருந்த சொர்ணா, தமிழ் எம்.ஏ. ஒரு சிறுபத்திரிகையில் உதவி ஆசிரியராக இருந்ததாகக் குறிப்பிட்டிருந்தாள். ஒரு பெண்பிள்ளை எங்கேயும் ஒன்றி இருந்துக்குவா. முக்கியமாக கீதாவுக்கு பேச்சு துணையாங்கறது என் கணிப்பு"

அவரது கணிப்பு முற்றிலும் தவறில்லை என்று மாலினிக்குப் பட்டது. வேலையாட்களிடம் பேசி தெரிந்துகொண்டதில், ஏதோ எழுதுவது, வாசிப்பது போக அந்த சொர்ணா, எதையேனும் இழுத்துப்போட்டுத்தான் மாற்றி இருக்கிறாள். தோட்டத்துப் பூக்கள், பூஜையறைக்கான மாலைகளாக அவள் கைகளில் மாறியிருக்கின்றன. தோட்ட வேலை செய்பவர்களின் பிள்ளைகளுக்குப் பாடம் எடுப்பது, பெண்களுக்கு கைவேலை என்றிருப்பவள் சனி, ஞாயிறு இங்கு இருப்பதில்லை. ஆனால் கீதாவிடம் நெருங்கிப் பழகவில்லை அவளும்.

அதையே விஸ்வநாதனும் குறிப்பிட்டார்.

"வீடு கலகலப்பா இருக்கட்டுமேன்னு நான் செய்த ஏற்பாடு எதுவும் கீதாவுக்கு ஏற்கலை. மனசில் இருக்கறதை நான் மட்டுமில்லே, அவளுமே பேசித் தீர்த்துக்கலை..."

"ம்ம்.. இப்படி ஒரு நிலைமையும் வந்திருக்காது..."

"ஆனா என் பொண்டாட்டிய நான் கொன்னதா, மத்தவங்க என்ன... அவளே அஞ்சினதுதான் என்னை ரொம்ப வாதிக்குதும்மா மாலினி. இவ போனதும் இனி எனக்குன்னு யாரிருக்கா? அவளை அழிச்சிட்டு இனி நான் ஏன், எங்கே வாழறது? சூன்யமாகிட்ட வீட்டுல நடமாடவே எனக்குக் கூசுது..."

கண்ணீரை விழுங்கிவிட்டு இறுகி நின்றவரை கவலையாய் பார்த்திருந்தாள்.

தம்பதிகளில் பலருக்கு உள்ளூறும் பிரியத்தை வெளிக்காட்ட தெரியாது. இவர் அந்த ரகம்.. ஆனால் இவர் தனக்கு விஷமிட்டதாக ஏன் கீதா நினைத்தாள்? அவளை அப்படி யார் நம்பவைத்தது? அது யாரென்று தெரிந்தால்.. கொலையாளியைப் பிடித்தது போலத்தான்.

"பிரதாப் இங்கே வர்றதும் பிரியாவோட பழகுவதும் அதில் உங்களுக்கு ஆட்சேபனை இல்லையா அத்தான்?"

"நாம என்னத்தைத் தடை பண்றது? விவரமறிஞ்ச வயது. அவங்க முடிவுக்கு விட்டுட வேண்டியதுதான்..."

எதையும் ஆராயும், எதிர்க்கும் மனநிலையில் அவரில்லைதான். ஆனாலும் கேட்டாள்.

"பிரதாப்பைப்பற்றி விசாரித்ததுண்டா?"

"நம்ப இனமில்லை போல அந்தப் பையன்..."

"நான் கேட்டது குணத்தைப் பற்றி.. எப்படிப்பட்ட குடும்பத்துப் பிள்ளை என்று தெரிஞ்சுக்கிட்டீங்களா?"

"அந்தப் பிள்ளைதான் கீதாகிட்டே பாசமாகப் பழகினான். தன் கடையில் இருந்து எதையேனும் கொண்டு வந்து தர்றது.. வந்ததும் முதல்ல அவளைத் தேடிப்போய் ரெண்டு வார்த்தை பேசறதுன்னு இருப்பான். மரியாதையான பேச்சு. அதுக்கு மேல என்னத்த விசாரிக்கறது?"

"உங்களுக்கும் உதவுவானா அத்தான்?"

"உண்டு.. வெளியூர் போக டிக்கெட் எடுத்துத் தர்றது, காரில் போகணும்னா பெட்ரோல் நிரப்பி வைக்கறதுன்னு உபகாரமான பையன்..."

"நீங்க ஊரில் இல்லாதப்ப, இவங்களுக்கும் ஒரு ஆண் துணையாச்சு, இல்லையா?"

"அதுல ரொம்ப கவனமானவன். நான் இல்லாதப்ப வந்து போறதில்லை போல.. சின்ன ஊர்ல விகல்பமான பேச்சுக்கு இடம் தந்திடும்னு புரிஞ்சு கண்ணியமாய் ஒதுங்கிடுவான்..."

"ஓ!" வரிசையாய் பிரதாப் பற்றி வந்த பாராட்டுக்களைக் கேட்டுக் கொண்டாள்.

10

போலீஸ் இன்ஸ்பெக்டர் தன் காக்கி தொப்பியைக் கழட்டி வைத்துவிட்டு உட்கார்ந்தார். பண்ணை வீட்டில் மாலினி, மகிபனோடு விஸ்வநாதனும் இருந்தார்கள்.

"மாலினி மேடம், உங்க யூகம், தகவல்கள் எல்லாம் இந்த கேஸை முடிக்க ரொம்ப உதவியாக இருந்தது, நன்றி!"

காவல்துறையின் நன்றியை ஒரு சிறு முறுவலோடு ஏற்கவும் கூடாத நிலையில் இருந்தாள் மாலினி.

இவளது பாட்டி அடிக்கடி சொல்லும் பழமொழி, 'மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கக்கூடாது' என்பது. நம்பி மோசம் போனது பெரிய விஷயமோ, விசேஷ நாளில் வேலைக்காரி மட்டம் போட்டதோ நடக்கும்போது பாட்டியின் வாயில் இந்தப் பழமொழிதான் உருளும்.

சிறு வயதாயிருந்தபோது மாலினி கேட்டதுண்டு.

"மண் குதிரை பாதி சவாரியிலே ஆற்றில் கரைஞ்சிடும், அப்படித்தானே பாட்டி?"

"அப்படியில்லே மாலு. அது மண் குதிர். வெள்ளம் புரளும் ஆற்றில் ஆங்காங்கே மண் குதிர்கள் தெரியும். அதில் நின்னுடலாம்னு நம்பி அதில் காலை வச்சோம்... போச்சு. புதைஞ்சு மூழ்கிடுவோம். உலகத்துல நம்பிக்கைக்கு உரியவங்க, வெகு சொற்பம்.. பெரும்பாலும் மண் குதிருங்கள்தான்..."

வயதான பாட்டியின் எதிர்மறை எண்ணம் என்று அதை அன்று சிரித்து ஒதுக்கிய மாலினிக்கு இன்று பண்ணை வீட்டில் நடந்தது அதுதான் என்றுபட்டது.

மனைவியை இழந்த கடந்த மூன்று வாரங்களில் விஸ்வநாதன் இளைத்துக் கருத்திருந்தார். கடந்த சில நாட்களில் தான் பந்தாடப்பட்ட வேகத்தை அவரால் தாங்க முடியவில்லை. மனைவியின் சாவுக்கு தான்தான் காரணம் என்ற சந்தேகப் பேச்சில் வறுத்தெடுத்த போலீஸ் விசாரணையில் மனிதர் வதங்கிவிட்டார். இப்போது கொடும் நாடகம் ஒரு முடிவுக்கு வந்து விட்டாலும் கடும் காய்ச்சல் கண்டு சோர்ந்த உடம்பு போலிருந்தது தளர்வு. அந்தப் பின்மதிய வேளைக்கு இதமாய் மாலினி சொல்லியிருந்தபடியே எலுமிச்சை சாறு ஜில்லெனப் பரிமாறப்பட்டது. கொறிக்க, வறுத்த வேர்க்கடலை.

காலியான குவளைகளில் மேலும் பழச்சாறை நிரப்பியவளை இன்ஸ்பெக்டர் மறுபடி பாராட்டினார்.

"குற்றம்.. அதுவும் கொலை குற்றம் நடந்திருக்குன்னதும் பலர் அந்த ஸ்பாட்டில் இருக்கவே தயங்குவாங்க. மேடம் அடிக்கடி வந்து, இங்கே இருக்கறவங்ககிட்டே பேசி கொடுத்த துப்பு, சீக்கிரம் கேஸை முடிக்க எங்களுக்கும் உதவுச்சு. இல்லைன்னா, இழுத்திருக்கும்"

"ஓரளவு யூகிக்க முடிந்தாலும் சொர்ணம் பற்றி காவல்துறை விசாரித்து தந்த தகவல்.. அப்படியொரு திருப்பத்தை நான் எதிர்பார்க்கலை..." உதடு பிதுக்கினாள் மாலினி.

"எங்க அனுபவத்தில் பலதும் பார்த்தாச்சு மேடம். இங்கே சொர்ணம் தந்திருந்தது போலி அட்ரஸ்னு தெரிஞ்சதுமே இந்தத் திருப்பம் வரும்னு தெரிஞ்சுடுச்சு. நீங்க தந்த துப்புதான் ஆரம்பம்..."

மாலினிக்கு அது கிடைத்தவிதம் எதேச்சையானதுதான். இரு வாரங்களுக்கு முன்பு அவள் பண்ணை வீட்டுக்கு வந்தபோது, சொர்ணத்திடமும் பேச்சுத் தந்திருந்தாள். சொர்ணத்தின் அறைக்கே போய் கதவைத் தட்டியபோது, திறந்தவளின் முகத்தில் தேவையில்லாத மிரட்சி தெரிந்தது. அவசரமாக அறையைப் பார்வையிட்ட மாலினி இயல்பாய் உள்ளே நுழைந்து உட்கார்ந்து கொண்டாள்.

"பெட்டி அடுக்கிட்டு இருக்கீங்க போல? எங்கே கிளம்பறீங்க? விசாரணை முடிஞ்சு போலீஸ்

Optimized using trial version www.balesio.com

சொல்லும்வரை இங்கிருந்து போக முடியாதே?"

''கீதா மேடம் இல்லாமல் நான் இங்கிருப்பது அவ்வளாவு சரியாய் இருக்காதே. தயாராக இருந்தால் அனுமதி கிடைச்சதும் புறப்படணும்...''

"விஸ்வநாதன் சார் என்ன சொன்னார்?"

"நிலைகுலைஞ்சு போயிட்டார். இந்நிலையில் அவரால் எழுதுவதற்கு ஏதும் யோசிக்கவும் முடியாது. அவரும் மறுத்து சொல்லலை..."

பெட்டிக்குள் அரைகுறையாய் திணிக்கப்பட்ட ஒரு துணிக்கடை பிளாஸ்டிக் பை கீழே விழ, சொர்ணா அதை அவசரமாக எடுத்தாள்.

"அடடே நல்ல கலர். கொடுங்க பார்ப்போம்" என்றபடி மாலினி நீட்டிய கைக்கு அந்தப் பை வரவில்லை!

''இல்ல.. இது வேற ஒருத்தருக்கு வாங்கினது...'' தயங்கினாள் மற்றவள்.

''ருக்மணி நீலத்தில் முத்து வேலை டிசைன் கண்ணைப் பறிக்குது. பார்த்துட்டு தர்றேன்'' ஏறக்குறைய சொர்ணாவின் கைகளில் இருந்து பையைப் பிடுங்கி, துணியைப் பிரித்து பார்த்தவளுக்கு சற்று ஆச்சரியந்தான்.

நடந்த நிகழ்வை அசைபோட்ட மாலினி இன்ஸ்பெக்டரிடம், "சொர்ணாவின் பையில் ஆறு வயசு பெண் குழந்தைக்கான கவுன் இருந்தது. அதைவிட அதை அவங்க மறைக்கப்பார்த்தது நெருடுச்சு. அவங்க வீட்டுக்குப் போய் விசாரிச்சா ஏதேனும் விவரம் கிடைக்கலாம்''னு சொன்னேன். விரைவிலேயே சொர்ணா தந்தது போலி விலாசம்னு, வேறு விலாசத்தில் அவளுடைய தாயாருடன் சொர்ணாவின் சின்ன மகளும் வசிப்பது தெரிந்தது" என்றார்.

விஸ்வநாதன் நலிந்த குரலில் சலித்தார்.

"தனக்கு கல்யாணமாகி ஒரு பெண் குழந்தை இருக்கும் உண்மையை சொர்ணா எங்கிட்டே எதுக்கு மறைக்கணும்? இந்தக் கள்ளத்தனத்தை கீதா எப்படியோ உணர்ந்திருக்கணும்...''

"உலகத்தில் இதெல்லாம் சகஜமாயிட்டதால வீட்டுக்குள்ளே வேலைக்கான யாரையும் ஏத்தறதுக்கு முன்னே எங்களிடம் ஒரு வார்த்தை விசாரிச்சுக்கோங்கறோம். பொதுமக்கள் அதை காதுலயே போட்டுக்கறது இல்லை. அந்த சொர்ணாவை ஒருத்தன் பிள்ளையைக் கொடுத்து ஏமாத்தியாச்சு. அம்மாவின் வீட்டில் இருந்தபடி தன் பெண்ணை வளர்த்தவள், தன் மரியாதைக்காக, பாதுகாப்புக்காககூட இந்த விவரத்தை மறைச்சிருக்கக்கூடும். அல்லது..''

செருமிக் கொண்ட காவல்துறை அதிகாரி தொடர்ந்தார்.

"தப்பான திட்டத்தோடும் இங்கே வந்திருக்கலாம். அப்படித்தான் எனில் கீதாம்மாவை கொலை செய்யவும் துணிந்தவளா சொர்ணா அப்படீங்கற ரீதியில் நாங்க தடாலடியாக விசாரித்தபோதுதான் அடுத்த துப்பு கிடைச்சுது...''

மர்மங்களின் முடிச்சில் சிக்கியிருத டாக்டர் மகிபன், ''அது என்ன?'' என்பதுபோல தன் மனைவியை ஏறிட்டார்.

அவ்வப்போது அவள் சில தகவல்களைத் தருவது உண்டென்றாலும் கோர்வையாய் விவரங்களைக் கேட்கும்போதுதான் தெளிவாகப் புரிந்தது.

"புரோக்கர் கதிரைப் பத்தி சொர்ணா குறிப்பிட்டிருக்கா. அவன் மேல ஏற்கனவே புகார் உண்டு. சரியான சாட்சியம் இல்லாததால பயல் சிக்கலை. அந்த புரோக்கர், பிரதாப்புக்கும் பழக்கம். அடிக்கடி பிரதாப்பின் ஸ்டோரில், வெளியே அவங்களைச் சேர்த்து பார்த்ததாக சொர்ணா சொன்னதும், எங்களுக்கு வாகாக ஒரு பிடி கிடைச்சுது...''

"கதிர் நிலத் தரகரா?"

"தில்லாலங்கடி தரகருங்க! நிலம்னா பட்டா இல்லாத இடத்தைக் காட்டுவான். எப்பேற்பட்ட கேடியையும் க்ளாஸான ஆளுன்னு சொல்லி கல்யாண சந்தையில விலை பேசிடுவான். திருட்டு பொருட்களை விற்றுத்தர, கூடுதல் கமிஷன். அந்த கதிர் பயலை நாங்க தேட ஆரம்பிச்சப்பதான் மாலினி மேடம் அடுத்த துப்பு தந்தாங்க...''

அனைவரின் கண்களும் தன் மீது பதிய, மாலினி விஸ்வநாதனைப் பார்த்து இதமாகப் பேசினாள்.

''மன்னிக்கணும் அத்தான்.. நீங்க தனக்கு விஷம் வைத்ததாக நம்பிய, அதாவது நம்ப வைக்கப்பட்ட கீதாவிற்கு இங்கிருந்த எல்லார் மீதும் எரிச்சல்தான். அவள் நம்பிய, நேசிச்ச ஒரே நபர் பிரதாப். தன் மேல பாசமாக இருந்தவனுக்கு தானும் ஏதேனும் செய்வதுதான் முறை என்ற கருத்து அவள் பேச்சில் இருந்தது எனக்குப் புரிஞ்சது, கீதா எதையும் உடைத்துச் சொல்லாமலேயே. தனக்குப் பரிசுகளைத் தந்த பிரதாப்புக்கு பிரதியாக ஏதேனும் தர, செய்ய அவள் விரும்பினால்.. அது என்னவா இருக்கும்னு யோசிச்சேன். பிரதாப்பின் கடையில் போய் அவனைப் பார்ப்பதுனு முடிவு செய்து போனால், அங்கே கட்டட வேலை மும்முரமாய் நடந்துட்டிருந்தது. பெயின்ட் வாங்க அவனும் வெளியே போயிருந்தான். பல லட்சங்கள் தேவைப்படும் வேலை செழிப்பாய் நடந்தால்.. அதற்கான பணம் அல்லது லோன் வந்தது எங்கிருந்துனு விசாரிக்கக் கேட்டுக்கிட்டேன்"

"அது அடுத்த திருப்பமாச்சு. இங்கே கடை போட்டால் நல்லா போகும்னு இடத்தைக் காட்டி விற்ற கதிரோடு பழகினதும ரெண்டு பேருக்கும் தாங்கள் ஒருத்தருக்கு அடுத்தவர் சளைக்காத ரகம்னு தெரிய, ஒட்டிக்கிட்டாங்க. பிரதாப்பின் ஒரிஜினல் பேரு தனபால்..

11

கொலையாளி யார் என்பதை காவல் துறையினர் இவர்களுக்கு தெரிவித்து, குற்றவாளியைக் கைதும் செய்து விட்டதாகத் தெரிவித்தது ஒரு பெரிய நிம்மதி என்றாலும் கடும் இழப்பில் இருந்த விஸ்வநாதன்தான்... ஒன்றன் பின் ஒன்றாக எம்பியடித்த அதிர்ச்சி அலைகளைத் தாங்க கூடாமல் சரிந்து உட்கார்ந்து நெற்றியை நீவியபடி இருந்தார்.

''சூடாக ஏதாவது குடிக்கறீங்களா அத்தான்?''

"தண்ணி போதும்"

வந்த குவளை நீரை முழுக்கப் பருகியவர், விட்ட பெருமூச்சுக்குப் பிறகு கதை தொடர்ந்தது.

''பெற்றோரை சிறு வயசிலேயே இழந்த தனபாலை வளர்த்தது அவனுடைய தாய் வழி பாட்டனார். வளர்ந்ததும் ஓரளவு சொத்துள்ள தன் தாத்துவினுடைய சொத்து எதுவும் தனக்கு வராது, தன் மாமனுக்குத்தான் போகும் என்று உணர்ந்த தனபாலின் மூளை குறுக்கு வழியில் ஒரு திட்டத்தைத் தயாரித்தது. 'இவனைப் படிக்கவைத்து ஆளாக்கினதே பெருசு'னு சொல்லி தன்னை உதற நினைத்த மாமன்கள் மேலுள்ள காட்டத்தை, வளர்த்த தாத்தாவின் மேல்தான் அவனால் காட்ட முடிந்தது. தூக்க மாத்திரை கலந்த பாலை பெரியவருக்குத் தந்தவன், அரை மயக்கத்தில் சாக இருந்தவரிடம் தான் தயாரித்த பொய் உயிலில் கையெழுத்தும் வாங்கிட்டான்...''

"ஆனால் சாட்சி கையெழுத்து இல்லாமல் உயில் செல்லுபடி ஆகாதே..?"

''ஆமாம் டாக்டர். அந்த பொய் கையெழுத்தில் கூட கதிரின் பங்கு இருந்திருக்கிறது...''

"கடவுளே.. ஒரு கொலையாளியை, அதுவும் தன்னை ஆளாக்கின தாத்தாவை கொன்றவனை நான் வீட்டிலேற்றி, இங்குள்ள பெண்களோடு சுதந்திரமாய் பழக விட்டிருக்கேனே..''

மறுபடி மண்குதிரை உவமானம் மாலினிக்குள் எழும்பியது.

"பெரியவரின் சாவில் அவரது மகன்களுக்கு அதாவது தனபாலின் மாமன்களுக்கு சந்தேகந்தான். ஆனால் அதற்குள் உடலை எரிச்சு, அஸ்தியும் கரைச்சாச்சு. உயில் வாசிக்கப்பட்டதும் அவங்க சந்தேகம் பெருசாயிடுச்சு. ஆனால் தடயம் எதுவும் இல்லையே... ஆனா ஒண்ணுங்க, தப்பு செய்தவன் எவனும் தப்பிட முடியாது. இவங்க குடும்பத்து நாடகத்தை கவனிச்ச அந்த ஏரியா மருந்து கடைக்காரர் சுதாரிச்சிட்டார். அவர் கடையில இருந்துதான் மூணு வாரங்களா அப்பப்போ தனபால் தூக்க மாத்திரைகளை வாங்கியிருக்கான்...''

"மருந்து கடைக்காரரும் முறைப்படி போலீஸுக்கு வந்து இந்தத் தகவலை சொல்லலை. டாக்டரோட சீட்டு இல்லாம எப்படி தூக்க மாத்திரையை மொத்தமா ஒரே ஆளுக்கு நாலு தரம் தந்தேன்னு நாங்க அவன் மென்னியைப் பிடிப்போம்ல. ஆனால் பெரியவர் கொலையானதாக அக்கம் பக்கம் ஒரு பேச்சு பரவிடுச்சு"

''தாத்தவின் சொத்தை அதற்குள் விற்றவன், இங்கே கடையை எழுப்பிட்டான். சின்ன ஊரில் நிலமும் கட்டட வேலையும் சல்லிசாய் முடியும்னு அவன் நினைச்சது போலில்லை. இங்கேயும் பாதி வேலை முடியும் முன்னமே கையிருப்பும் காலியாயிடுச்சு...''

"ஒரு பாதியில் கடையை நடத்த ஆரம்பித்தவன், மீதியை கட்டி முடிக்க இருந்தபோதுதான் உங்க குடும்பத்தின் பழக்கம் ஏற்பட்டது. முதலில் பயல் சிக்கினது உங்க வீட்டு பொண்ணு பிரியாவின் அழகிலதான். அவளைத் தொடர்ந்து உங்க வீட்டுக்கு வந்தவனின் கபட்டு மூளை உங்க வீட்டு நிலவரத்தை கணக்கெடுத்துருச்சு. தான் தனிமைப்பட்டதாக நினைச்ச உங்க மனைவியிடம் பாசங்காட்றாப்பல ஒரு நாடகம்!"

"வேலி ஓணானை மடியில கட்டிக்கிட்டேன்" ஒப்புக் கொண்டார் விஸ்வநாதன்.

"இளகின கீதா, பிரதாப்புக்கு உதவ தன் நகைகளைத் தந்திருந்தாள். அடகு வைத்து, தன் வேலை முடிந்ததும் நகைகளைத் தந்துடுவான்ங்கறது அவ நினைப்பு, ஏமாந்துட்டா"

"நகைகளைத் தந்திருப்பான்னு எப்படி யூகிச்சே மாலினி?"

"பெண்களிடம் பெரும்பாலும் பணமாய் இருக்காது. பொருள்தான், அதுவும் தங்கம்தான் லட்சக்கணக்கில் இருக்கும். ஆக கீதாவின் நகைகள் இங்கே பத்திரமாய் இருக்குதானு அறிய அத்தானிடம், 'இனி நகைகங்க வீட்டில் இருப்பது பாதுகாப்பில்லை. எடுத்து பாங்க் லாக்கரில் வச்சிருவோம்'னு சொன்னேன். அப்படி செய்ய முனையவுந்தான் தெரிஞ்சது, பெரிய நகைகள் எதுவுமே இங்கே இல்லைங்கறது!"

"கெமிக்கல் அறையில் என்னோட வந்து பேசிய பிரதாப்... அதாவது தனபால், விஷம் எதுன்னும் கேட்டு தெரிஞ்சுக்கிட்டான். அப்போ அதை ஒரு பாட்டிலில் எடுத்து வைத்திருக்கணும். ஆனா அதை ஏன் முதலில் கொஞ்சமாவும் பிறகு ஒரேயடியாகவும் கீதாவுக்குத் தரணும்? கொடுமைக்கார பய..." வெதும்பினார் விஸ்வநாதன்.

"என்ன அளவு தரணும்னு தெரியாது அவனுக்கு. தவிர பழியை உங்க மேல போடறதும் அவனது நோக்கம். சமையல்காரம்மா முன்னிலையில் ஐயாதான் பாத்திரத்தைத் திறந்தார்னு ஏதோ சொல்ல, வேலைக்காரர்களுக்கும் தங்கள் முதலாளியின் மேல் சந்தேகம். பிரியாவுக்குக் கல்யாண பேச்சும் ஆரம்பிக்க, 'எப்போ என் நகைகளைத் திருப்பி தருவேன்னு' கீதா பிரதாப்பிடம் கேட்டிருக்கக்கூடும். அத்தனையும்தான் வித்தாச்சே. ஆக, விஷத்தை அள்ளி, கலக்கிட்டான். ஆனா கதிரைப் பிடிச்சு மொத்தி, மாத்தி மாத்தி ரெண்டு கேடிகளிடம் இருந்தும் விஷயத்தைக் கறந்ததில் திருட்டு நகை வியாபாரியும் எங்களிடம் சிக்கிட்டான்..."

"ஒரே குற்றத்தின் மூலம் பல குற்றவாளிங்க சிக்கியிருக்காங்க. உங்க நகைகளை மீட்டாச்சு சார். ஏதோ எங்களால் முடிஞ்சது" எழுந்தார் இன்ஸ்பெக்டர்.

"கேடிப் பயலுக. பல வருஷம் கம்பியும் களியும்தான். பாவம் பிரியா.. கொலையாளி பிரதாப்னு தெரிய வந்ததும் வெலவெலத்து அடங்கிட்டா. அந்த அதிர்ச்சியோடு இங்கே இருக்க வேண்டாம்னு அவ பெத்தவங்க மகளைத் தங்களோடவே அழைச்சுப் போயாச்சு."

"எனக்கு கீதாவுக்கும் இன்னுமொரு கஸின் உண்டு அத்தான். பேர் பத்மா. சிட்டியிலே ஒரு சிறு பள்ளியை ரொம்ப சிறப்பா நடத்திட்டு இருக்கா. விஸ்தாரமான இடமொன்றைத் தேட்டிட்டு இருக்கா. பயிரிடாத ஒரு பகுதி நிலத்தை அவளிடம் விற்றால், இங்குள்ள சூழல் மாறுவதோடு, உங்க இடம் நல்லபடி பயன்படும். திருப்தியும் கிடைக்கும்.." என்று மாலினி மேலும் விவரங்களைத் தர,

"இன்ஸ்பெக்டர் சார் பார்த்து தகுதியான ஆள்தானான்னு சொல்லிட்டா, நிலம் என் அன்பளிப்பாகவே இருக்கட்டும். பள்ளியின் பேரை மட்டும் 'கீதா வித்யாலயா'னு வைக்கணும்"

"எஸ் சார்..." கைகுலுக்கிவிட்டு அதிகாரி விடைபெற, பேச்சு குடும்பங்கள் பற்றி போனது.

"தாம்பத்யம்னா சந்தோஷமும் சண்டையும் உண்டுதான். ஆனா கடைசியில் கூட்டிக் கழிச்சால் மிஞ்சறது சந்தோஷமாதான் இருக்கணும். எனக்கு வருத்தத்தை மிச்சம் வச்சிட்டுப் போயிட்டாம்மா. அவளும் பாவம் மண்குதிரையை நம்பிப் போயிட்டா..."

வியப்புடன் விஸ்வநாதனை ஏறிட்டாள்.

"உங்க புத்தகத்தை நீங்களே எழுதினால் சிறப்பா வரும்னு தோணுது அத்தான். நானும் உதவ, சீக்கிரமே வெளியிடலாம்..."

"நல்லதும்மா செய்வோம்"

அந்த வார இறுதியை அங்கேயே தன் கணவரோடு கழித்த மாலினி, பள்ளி ஆரம்பிக்கும் வேலையாய் பத்மாவையும் வரச்சொல்ல, பண்ணை வீடு தன் பெரும் இழப்பில் இருந்து மீள ஆரம்பித்தது!